விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 08 திங்கட்கிழமை (25.10.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 310

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD


RAMCO CEMENT

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

RAMCO

## புலிகளின் ஆதரவாளர்களால் பொருளாதாரத்துக்கு ஆபத்து

### அமைச்சர் பீரிஸ் கவலை



(லண்டன்)

தமிழீழ விடுதலைப்புலி ஆதரவாளர்கள் பொருளாதாரத்தை வலுவிழக்கச் செய்ய முயற்சித்து வருவதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். இலங்கையில் மீண்டும் வன்முறை சம்பவங்களை கட்டவிழ்த்து விட முடியாது என அறிந்து கொண்ட புலி ஆதரவாளர்கள் வேறு வழிகளில் நாட்டை சீர்குலைப்பதற்கு முனைப்பு காட்டிவருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவை விடுவிக்க மதத்தலைவர்கள் கோரிக்கை

(கொழும்பு)

ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு மதத் தலைவர்கள் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆயுதக் கொடுக்கல் வாங்கல் மோசடியில் ஈடுபட்ட குற்றத்திற்காக சரத் பொன்சேகாவிற்கு 30 மாத கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது

சரத் பொன்சேகா விவகாரத்தில் தவறு இழைக்கப்பட்டுள்ளதாகவும், இந்தத் தவறை அரசாங்கம் திருத்திக் கொள்ள வேண்டும். சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க (16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் வலையமைப்பை ஒடுக்க அமெ.நடவடிக்கை

(வாஷிங்டன்)

வெளிநாட்டில் இருந்து இயங்கிவரும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் உள்ளிட்ட விடுதலைப்புலிகளின் சர்வதேச வலையமைப்பின் செயற்பாடுகளை ஒடுக்குவதற்காக அமெரிக்காவின் எப்.பி.ஐ. நிறுவனம், அந்நாட்டு பாதுகாப்பு அதிகாரிகளுடன் இணைந்து விசேட வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க அமெரிக்காவுக்கான இலங்கை தூதரகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. (16ஆம் பக்கம் பார்க்க)

## பாகிஸ்தான் ஜனாதிபதி நவம்பரில் வருகிறார்

(கொழும்பு)

பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி அரசு முறை பயணமாக அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்கிறார். அவரது பயணத்தின் போது வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு குறித்து இரு நாட்டு தலைவர்களும் விவாதிக்க உள்ளனர்.

சர்தாரியுடன் பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சர் ஷாமெக்மூத் குரேஷியும் வருகிறார். சர்தாரியின் பயணத்திற்கான திகதி இன்னும் முடிவு செய்யப்படவில்லை என பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அதிகாரி ஒருவர் கூறினார். இலங்கை இராணுவ வீரர்களுக்கு பாகிஸ்தான் பயிற்சி அளித்து வருவதும் இலங்கைக்கு பாகிஸ்தான் ஆயுதங்கள் விநியோகம் செய்வதும் குறிப்பிடத்தக்கது. (ச-5)

## போர்க்குற்ற சாட்சியங்களை வழங்க பிரித்தானிய தமிழர் பேரவை உதவி

தமிழ் மக்கள் மீது படையினர் மேற்கொண்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தமிழ் மக்கள் சாட்சியம் அளிப்பதற்கு அடிப்படை உதவிகளைச் செய்வதற்கு பிரித்தானிய தமிழர் பேரவை ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூனால் ஆலோசனை வழங்க அமைக்கப்பட்டுள்ள நிபுணர் குழு எதிர்வரும் டிசம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் தமிழ் மக்களிடம் சாட்சியங்களைக் கோரி நிற்கின்றது.

இவ்வாறான பின்புலத்தில் பிரித்தானியாவில் உள்ள தமிழ் மக்கள் தமது சாட்சியங்களை அனுப்புவதற்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு உரிய ஏற்பாடுகளை பிரித்தானிய தமிழர் பேரவை மேற்கொண்டு வருகின்றது.

இது பற்றிய விபரங்கள் (16ஆம் பக்கம் பார்க்க)

## வேலணை மற்றும் மண்டைதீவிலிருந்த உயர் பாதுகாப்பு வலயங்கள் நீக்கம்

(வேலணை)

இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் உள்ளடக்கப்பட்டு இருந்து வந்த மண்டைதீவு மத்தி பிரதேசம் மற்றும் வேலணை வங்களாவடி முதல் வேலணை மத்திய கல்லூரி வரையிலான பிரதேசம் ஆகியன நேற்று முதல் மக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

மண்டைதீவு பிரதான வீதி, வேலணை-ஊர்காவற்றுறை பிரதான வீதி ஆகியவற்றில் கடந்த 20 வருட காலமாக இருந்து வந்த போக்குவரத்துத் (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அடுத்தமாதம் யாழில்


(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் ஆரம்பிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகள் எதிர்வரும் நவம்பர் 11,12 மற்றும் 13 ஆகிய தினங்களில்யாழ்ப்பாணத்தில்நடைபெறவுள்ளன.

முதல்நாள் விசாரணைகள் யாழ்.செயலகத்தில் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இவ் விசாரணையின்போது விடுதலைப் புலிகளின் முக்கியபிரமுகர்களின் உறவினர்கள் சாட்சியமளிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## தமிழினப் படுகொலைகளை விசாரித்து சர்வதேசம் தீர்வை பெற்றுத்தரவேண்டும்



### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் கடந்த 60 வருடங்களாக இடம்பெற்ற தமிழினப் படுகொலை தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தப்பட்டு தமிழ் மக்களுக்கு நிரந்தரத் தீர்வை சர்வதேசம் பெற்றுத் தரவேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது. யாழ்ப்பாணம் காங்கிரஸ் இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அம்முன்னணி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இவ் ஊடகவியலாளர் மாநாட்டில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் எஸ்.வரதராஜன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன், திருமதி பத்மினி சிதம்பரநாதன் மற்றும் (15ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மாகாணமட்ட பரீட்சை நவம்பர் 18இல் ஆரம்பம்

(திருகோணமலை)

வடக்கு மாகாணகல்வித்திணைக் களத்தினால் நடத்தப்படும் தரம் 9, 11 இற்கான மூன்றாம் தவணைப் பரீட்சைகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 18 ஆம் திகதி ஆரம்பமா குமென வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் வலயக்கல்விப் பணிப்பாளர் ஊடாக பாடசாலை அதிபர்களுக்கு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளதாவது, வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தால் நடத்தப்படும் தரம் 9, 11 மாணவர்களுக்கான மூன்றாம் தவணைப் பரீட்சை நவம்பர் 18 ஆம் திகதி ஆரம்பமாகும்.

இதில் கணிதம், தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம் மற்றும் வராவாறு ஆகிய பிரதான 5 பாடங்களுக்கான பரீட்சை நடத்தப்படும்.

ஏனைய பாடங்களுக்குரிய வினாத்தாள்களும் ஏனைய தரங்களுக்குரிய வினாத்தாள்களும் வலயக் கல்வி அலுவலகத்தினால் நடத்தப்படும்.

இவ்வாறு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ச-5)

# கிளி. மத்திய கல்லூரியில் கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மத்திய கல்லூரியிலிருந்து கடந்த 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் தரம் ஐந்து புலமைப்பரீட்சைக்கு தோற்றி. சித்தியடைந்த (100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற) மாணவர்களுக்கான கலந்துரையாடல் நாளை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரியின் ஆரம்பப்பிரிவு பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

பரீட்சைக்கு தோற்றி நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக வேறு மாவட்டங்களில் கல்விகற்கும் மாணவர்கள் பெற்றோர்களுடன் தவறாது கலந்து கொள்ளுமாறு கல்லூரியின் பிரதி அதிபர் கெங்காதேவி ஜெயராஜ் கேட்டுள்ளார். (ச-5)


# அமைச்சரின் அட்டகாசத்தால் அதிர்ந்துபோன பிரதிநிதி

(வவுனியா)

முல்லைத்தீவு மற்றும் வவுனியா பகுதிகளில் மீள்குடி யேற்றப்பட்ட தமிழ் மக்களுக்கு இரு சக்கர உழவு இயந்திரங்களை வழங்குவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் திட்டமிட்டிருந்தது.

400 உழவு இயந்திரங்களை கையளிக்கும் இந்த நிகழ்வு கடந்த வாரம் இடம்பெற்றபோது, அதில் தலையிட்ட அமைச்சர் ஒருவர், சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் தெரிவு செய்த மக்களின் பட்டியலை பறித்து எறிந்ததுடன், தான் கொண்டுவந்த பட்டியலில் உள்ளவர்களுக்கு உழவு இயந்திரங்களை விநியோகம் செய்திருந்தார்.

அமைச்சரின் இந்த அடாவடித்தனத்தால் அதிர்ச்சியும், வேதனையுமடைந்த செஞ்சிலுவைச்சங்கத்தின் வவுனியாபிராந்திய அலுவலகத்தின் தலைவர் மார்ய்சி லிமோனார் தனது வாகனத்திற்கு பின்னால் ஓடிச்சென்று கதறி அழுவதை படத்தில் காண்கிறீர்கள்.



அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தின் பிராந்திய தலைவருக்கே இந்த நிலை என்றால், சாதாரண தமிழ் மக்களின் வாழ்க்கையை ஒரு முறை எண்ணிப்பாருங்கள் என ஈழம் ஈ நியூஸ் இற்கு இது தொடர்பில் கருத்து வழங்கும்போது வவுனியா வாழ் தமிழ் மகன் ஒருவர் தெரிவித்துள்ளார். (ச-5)


வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக
யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகத்தால் நடாத்தப்பட்ட
அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்-2010

1-ம் பரிசு: நெ.சபானந்தர் ,தாவரவியல்துறை , யாழ்.பல்கலைக்கழகம். (2494)

2-ம் பரிசு: க.மகேந்திரம் ,புத்தூர் கிழக்கு , வாதரவத்தை. (2698)

3-ம் பரிசு: S.ஜெயகாந்தன் ,மடம்லேன் , திருநெல்வேலி வடக்கு ,யாழ்ப்பாணம். (4629)

ஆறுதல் பரிசு பெற்றோர் விபரம்:
6056, 5035, 228, 6796, 2669, 4567, 6145, 274, 5857, 1692.
பரிசில்களை வென்றோர் 07.11.2010இற்கு முன்னராக பின்வரும் முகவரியில் ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 4 மணிக்கும் 5 மணிக்கும் இடையில் தொடர்பு கொள்ளவும்.
இடம்: 361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
TP NO.: 0777448480 -யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகம்.
(2733)


# வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் புனரமைப்புக்கு மேலும் 3 மில்.ரூபாய் உதவி

## ஆளுநரால் உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் மத்திய மகா வித்தியாலய புனரமைப்பு பணிகளுக்கு மேலும் மூன்று மில்லியன் ரூபாய் நிதியை வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி வழங்கியுள்ளார்.

அத்துடன் புனரமைப்பு பணிகளை விரைவில் பூர்த்திசெய்து அடுத்த ஆண்டு முதலாம் தவணை முதல் பாடசாலை முழுமையாக இயங்க வேண்டும் எனவும் ஆளுநர் கேட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலய பகுதியிலுள்ள வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்கடந்த இருபது வருடங்களின் பின்னர் அண்மையில் இராணுவத்தினரால் பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.

போரினால் இடிபாடுகளுக்குள்ளான பாடசாலை கட்டிடத் தொகுதியை புனரமைப்பதற்கு வடக்கு மீள் எழுச்சித்திட்டத்தில் 6.5 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் வடக்கு மாகாண ஆளுநரினால் 2 மில்லியன் ரூபாய் நிதியும் வழங்கப்பட்டது.

இந் நிலையில் நேற்று பாடசாலைக்கு விஜயம் செய்த வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, பாடசாலையின் புனரமைப்பு பணிகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

இதன்போது பாடசாலை அதிபர் கேட்டுக் கொண்டமைக்கு அமைவாக மேலும் 3 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்வதாக வடக்கு மாகாண ஆளுநர் நேற்று உறுதியளித்தார்.

அத்துடன் பாடசாலையின் வகுப்பறைகள் புனரமைப்பு, மைதானத்தை மீளமைத்தல் மற்றும் பழைய கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்துதல் போன்ற பணிகளை இராணுவத்தினர் செய்து தருவார்கள் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார். (ச-5)

# எச்.என்.பியின் வாடிக்கையாளர் சேவை நிலையம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நஷனல் வங்கி தன் 199 ஆவது வாடிக்கையாளர் சேவை நிலையத்தினை வேலணை குறிகாட்டுவான் வீதி, வங்களாவடியில் இன்று திறந்து வைக்கிறது.

இதன் திறப்பு விழா காலை 9.00 மணிக்கு நடைபெறும் என வட பிராந்திய முகாமையாளர் ஜெயராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் இப்பிரதேச மக்கள் வங்கியின் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியும் என வடபிராந்திய முகாமையாளர் ஜெயராஜசிங்கம் தெரிவித்தார். (ச-5)


# மரண அறிவித்தல்

## நல்லதம்பி செல்லம்மா



காரைநகர் மொந்திபுலத்தை பிறப்பிடமாகவும், பழைய கண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி செல்லம்மா 24.10.2010 அன்று அன்னாரின் இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு நல்லதம்பியின் அன்பு மனைவியும் இராஜேஸ்வரி (UK), புவனேஸ்வரி, காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் புனிதமலர், யோகநாதன் (யோகா ரான்ஸ்போட்), புஸ்பவதி, காலஞ்சென்ற சிவநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், செல்லத்துரை, பாலகிருஷ்ணன் மற்றும் சுந்தரலிங்கம்,கிருபா,சொர்ணலிங்கம், பரமேஸ்வரியின் (கனடா ) அன்பு மாமியாரும் காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் சுரேஸ்குமார்(UK), தனுசா(UK),நந்தினி(UK), காலஞ்சென்ற செல்வநாதன் மற்றும் செல்வராணி, உதயகுமார், சிவரூபன்(கனடா), கவிதா, லோகேஸ்வரி, புஸ்பலிங்கம், நிமலன், கிரோஷ்(கனடா), சந்தோஸ் (கனடா) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், பிரதீப்(UK), நிது (UK), சந்துஜன்(UK), தனுஜன் (UK), சதுஜன் (UK), அபி (UK), சிவீத்(UK), சிந்து, லக்சி,கஜமுகன்,நிலவன்,மாறன்,அபிராமி(கனடா),சஞ்ஜனா,தனுசிகன் ஆகியோரின் பூட்டியும் காலஞ்சென்றவர்களான சுப்ரமணியம், சிவஞானசுந்தரலிங்கம், பரமேஸ்வரி மற்றும் பாக்கியம், பூமணி ஆகியோரின் அன்பு சகோதரியும் காலஞ்சென்ற பாலரட்ணம் மற்றும் மயில்வாகனம்,சோமசுந்தரம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரிமைகள் இன்று (25.10.2010 ) திங்கட்கிழமை காலை 8 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனகிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் ஏற்று கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

பழைய கண்டி
காரைநகர்
0217912802/0777560682.

தகவல்:
நல்லதம்பி யோகநாதன்
(யோகா ரான்ஸ்போட்)
(2734)


# மழை வேண்டி கொடும்பாவி எரிப்பு

(மாதகல்)

மழை வேண்டி மாதகல் விவசாயிகள் நேற்று கொடும்பாவி எரித்து சாந்தி செய்தனர். மாதகல் பகுதியில் நீண்டகாலமாக மழை பெய்யா ததினால் அப்பகுதி விவசாய நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளன.

மழையை நம்பி காலபோக நெற்செய்கையை மேற்கொள்ள விவசாயிகள் திட்டமிட்டிருந்த போதிலும் மழை பெய்யவில்லை.

இதனால் விரக்தியடைந்த விவசாயிகள் சமய நம்பிக்கையின் அடிப்படையில் நேற்று கொடும்பாவி எரித்து சாந்தி செய்தனர்.

இதேவேளை மாதகல் அரசடி சித்திவிநாயகருக்கு குளிர்த்தி அபிஷேகம் செய்யவும் விவசாயிகள் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)


## காணி வீடு விற்பனைக்கு

கச்சேரிக்கு வடக்குப் பக்கமாக யாழ்.கண்டி வீதிக் கருகாமையில் நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் 3 பரப்புக்காணியும் வீடும் விற்பனைக்கு உள்ளன.
தொடர்பு:-
தொ.பே:-0214916709
தரகர் இல்லாமல்
நேரில் தொடர்பு கொள்ளவும்.
(2731)

## தனியார் நிறுவனங்களை பதிவு செய்தல்

பெறுமதி மிக்க உங்கள் வியாபார நிறுவனத்துக்கான கௌரவத்தையும் நம்பிக்கையையும் பெற்றுக் கொள்வதற்காக உங்கள் தனியார் நிறுவனங்களை இலகுவான முறையில் பதிவு செய்து கொள்ள நாடுங்கள்,

VTL MANAGMENT
Daanston House
Colombo -03
T.P. 072 9994777
(சி/1384)



# இன்று ஒரு தகவல்

## நட்பில் குறையில்லை

இந்த உலகத்தில் ஒருவருக்கொருவர் நட்பாக இருப்பது நல்லது தான். அது அவசியமான ஒன்றாகும். நல்ல நட்பு, நல்லவிதமாக உபயோகப்பட வேண்டுமானால் அதற்குப் புத்திசாலித்தனம் தேவை.

இந்தக் கருத்து உங்களுக்கு வித்தியாசமாகத் தோன்றலாம். இருந்தாலும் அதிலுள்ள நியாயத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமானால், நீங்கள் இந்தக் கதையைக் கேட்கவேண்டும்.

காய்ந்த இலையொன்றும் மண்ணாங்கட்டியும் ரொம்ப சிநேகிதமாம். மிகவும் பிரியமாக நட்பாக பழகிக் கொண்டிருந்த தாம்.

ஒரு நாள் இரண்டும் சேர்ந்து பேசிக்கொண்டிருந்தன.

"நாம் இப்படியே இருந்து கொண்டிருக்கிறோமே. போற வழிக்கு புண்ணியம் தேடவேண்டாமா?" என்று கேட்டது இலை.

"தேடிக் கொள்ள வேண்டியதுதான். அதற்கு என்ன செய்யலாம்?" என்று கேட்டது மண்ணாங்கட்டி.

"வேறு என்ன செய்வது? மனிதர்களெல்லாம் புண்ணியம் தேடுவதற்கு காசிக்குப் போகிறார்கள். அதேபோல் நாமும் காசி யாத்திரை புறப்பட வேண்டியது தான்" என்றது இலை.

"சரி, புறப்படுவோம். இருந்தாலும் நீயோ இலை. நானோ மண்ணாங்கட்டி. நாமிருவரும் காசிக்குப் போவதென்றால் வழியில் பல இடையூறுகளை சந்திக்க வேண்டியிருக்கும்" என்றது மண்ணாங்கட்டி.

"அது நியாயம்தான்" என்றது இலை.

சரியென்று இரண்டுபேரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

அதாவது, போற வழியில் ஏதாவது துன்பம் வந்துவிட்டால் இரண்டு பேரும் ஒருவருக்கொருவர் உதவிசெய்ய வேண்டும். என்பதுதான் அந்த முடிவு.

இப்படி ஒப்பந்தம் செய்து கொண்டு இரண்டும் புறப்பட்டன.

சில நாட்கள் பயணம் செய்தன.

ஒரு நாள் கடுமையான காற்று வீச ஆரம்பித்தது. இலைக்கு இடைஞ்சலாகி விட்டது. உடனே மண்ணாங்கட்டி அந்த இலை மீது ஏறி உட்கார்ந்துகொண்டது. அதனால் அந்த இலையை காற்று அடித்துக் கொண்டு போகமுடியவில்லை. மண்ணாங்கட்டி இலையைக் காப்பாற்றிவிட்டது.

காற்று ஒரு வழியாக நின்றது. மறுபடியும் இரண்டும் பிரயாணம் செய்ய ஆரம்பித்தன. சில நாட்களில் திடீரென்று ஓரிடத்தில் மழைபெய்ய ஆரம்பித்தது.

உடனே அந்த இலை மண்ணாங்கட்டியின் மீது ஏறி உட்கார்ந்தது. அதாவது அதை இது மூடிக் கொண்டது.

மழை நீர் மண்ணாங்கட்டி மீது படமுடியவில்லை. அதனால் கரைந்து போகாமல் இது காப்பாற்றி விட்டது. இவை இரண்டுக்கும் மிக்க சந்தோசம்.

"பார்த்தாயா, நாம் ஒருவருக்கொருவர் எவ்வளவு ஒத்தாசையாக இருக்கிறோம்." என்று பேசிக்கொண்டன. மிகவும் உற்சாகமாக அவையிரண்டும் பிரயாணம் செய்ய ஆரம்பித்தன.

இன்னும் கொஞ்சத்தூரத்தில் காற்றும் மழையும் சேர்ந்து அடிக்க ஆரம்பித்தது.

காய்ந்த இலை பறந்துவிட்டது. மண்ணாங்கட்டி கரைந்து போனது.

காற்றில் அடித்துக்கொண்டு போன இலை, ஒரு கற்குவியல் மீது போய் விழுந்தது. வீதி அமைப்பதற்காக கருங்கல் சல்லி கொட்டி வைத்திருந்தார்கள்.

அங்கிருந்த ஒரு சின்ன கருங்கல் துண்டிடம், இந்த இலை தன்னுடைய நிலையைச் சொல்லிப் புலம்ப ஆரம்பித்தது. மண்ணாங்கட்டி கரைந்து போய் விட்டதே என்று சொல்லி வருத்தப்பட்டது.

இப்பொழுது அந்தக் கருங்கல் துண்டு சொல்லியது;

"உங்களுடைய நட்பு சரிதான். அதில் ஒன்றும் குறையில்லை. இருந்தாலும் காசிக்கு போக வேண்டும் என்ற உன்னுடைய நோக்கம் நிறைவேற வேண்டுமெனில் நீ என்னைப் போல் ஒரு கருங்கல்லை தேர்ந்தெடுக்க வேண்டும்." என்றது.

இதுதான் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய உண்மை. எந்த நட்பு எந்தச் சமயத்தில் எப்படி உதவுகிறது என்பதை புரிந்து கொள்வதுதான் முக்கியம்.

ஒரு ரயில் சென்னையிலிருந்து புறப்பட்டு திருச்சிக்குப் போய்க் கொண்டிருந்தது. அதில் முதல் வகுப்பு பெட்டியில் இரண்டுபேர் மட்டும் இருந்தார்கள். அதில் ஒருத்தர் இன்னொருத்தரைப் பார்த்துச் சொன்னார்.

"நல்ல வேளை! நீங்கள் எனக்குத் துணையாக வருவது மிகவும் சௌகரியமாக இருக்கிறது. ஒருவருக்கொருவர் துணையாக இருக்கலாம். நான் தனியாகப் போவதற்குப் பயந்தேன். ஏனெனில் என்னிடம் 10 ஆயிரம் ரூபா இருக்கிறது. அதைப் பத்திரமாக கொண்டுபோக வேண்டுமே என்று கவலைப்பட்டேன். நீங்கள் துணையாக இருப்பது நல்லதாகி விட்டது.

மற்றவர் இதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டார். பணத்தை அடித்துக் கொண்டு போகத்திட்டம் போட்டார். பணம் வைத்திருந்தவர் இலேசாக கண்ணை மூடியவுடன் இவர் பரபரப்புடன் அவருடைய பெட்டியைத் திறந்தார். பணத்தைக் காணவில்லை.

அவர் வைத்திருந்த மற்ற துணிமணிகளையெல்லாம் உதறிப் பார்த்தார். பணமில்லை.

சரி, ஆசாமி நம்மிடம் பொய்சொல்லியிருக்கிறார் என்று நினைத்துக் கொண்டார். விடிந்ததும ரயில் திருச்சிக்குப் போய்ச் சேர்ந்தது.

"அப்பாடா! பணத்தைப் பத்திரமாக கொண்டுவந்து சேர்ந்துவிட்டேன்" என்றார் அவர்

"பணத்தை எங்கே வைத்திருந்தீர்கள்?" என்று ஆர்வமாக கேட்டார் மற்றவர்.

அதற்கு அவர், "நீங்கள் பாத்ரூம் போயிருந்த சமயத்தில் என்னுடைய பணத்தை உங்களுடைய பெட்டியில் பத்திரமாக இருக்கட்டுமே என்று வைத்தேன். இப்பொழுது எடுத்துக் கொண்டேன். தாங்ஸ்" என்றார் இவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வடக்கு-கிழக்கு அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து பிரித்தானிய எம்.பி.க்களுக்கு விளக்கம்

வடக்கு -கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் அந்த பிரதேச மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்க அரசாங்கம் மேற்கொண்டுள்ள செயற்பாடுகள் குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்தியதாக லண்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் நிஹால் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு லண்டன் சென்றுள்ள அமைச்சர் பீரிஸ் பிரித்தானிய நாடாளுமன்றத்தின் இலங்கை விவகாரங்கள் தொடர்பான குழுவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்தியாவின் உதவியுடன் 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணித்துள்ளதாகவும் மேலும் 32ஆயிரம் வீடுகளை புனரமைக்க அதன் உரிமையாளர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

13ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தின் படி வழங்கப்படும் அரசியல் தீர்வு செயற்பாடானது வட பகுதிக்கு பொருந்தும் எனவும் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இலங்கை அரசாங்கம் சீனா உள்ளிட்ட ஆசிய நாடுகளுக்கு மேற்கொண்டுவரும் தொடர்புகள் பற்றியும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் பிரித்தானிய நாடாளுமன்ற குழுவுக்கு தெளிவுபடுத்தியதாகவும் நிஹால் ஜயசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

# பாட நூல்கள் விநியோகம் துரிதப்படுத்தப்பட்டுள்ளன

பாடசாலை மாணவர்களுக்கு அடுத்த ஆண்டிற்கான பாட நூல்கள் விநியோக நடவடிக்கைகள் தற்போது துரிதமாக மேற்கொள்ளப்படுவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியாக இந்த விநி யோகப் பணிகள் மேற்கொள் ளப்புடுவதாக தெரிவிக்கப்பட்டு ள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாத விடுமுறைக்கு முன்னர் பாடசாலை நூல்கள் முழுமையாக விநியோகிக்கப்பட்டு விடும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (ஶ்ரீ-2)

# இராசி பலன்

*25.10.2010*

*(ஐப்பசி 08, திங்கட்கிழமை)*

*துதியை முற்பகல் 9.18 மணி வரை*

*கார்த்திகை பின்னிரவு 1.23 மணி வரை*

*இராகுகாலம் 7.32-9.02 மணி வரை*

*சுபநேரம் 12.02-1.32 மணி வரை*

*கார்த்திகை விரதம்*

**மேடம்** யோகமான நாள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி பெறுவீர்கள், வீட்டுத்தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் சூழ்நிலை உருவாகும்.

**இடபம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், அந்நியரால் பெருமை சேரும், தொழில் நலன் கருதி பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள், திட்டமிட்ட காரியத்தில் மாற்றம் செய்யும் நிலை ஏற்படும்.

**மிதுனம்** பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், புதிய நட்பால் பொருள் விரயம் ஏற்படலாம், வியாபாரத்தில் சிறு மாற்றம் எற்படும், காரிய அலைச்சல் உண்டு.

**கடகம்** பல வழிகளிலும் பணம் வந்து சேரலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணமுண்டு, உங்கள் முன்னேற்றத்திற்கு வழிகாட்டியவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், உத்தியோக உயர்வுண்டு.

**சிங்கம்** சிறப்பான நாள், வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்லும், பெரியோரின் ஒத்துழைப்பு கிட்டும்.

**கன்னி** தொழிலில் இருந்து வந்த எதிர்ப்புகள் விலகும், கஷ்டமாக நினைத்த காரியமொன்று சுலபமாக முடிவடையலாம், பிரயாண நன்மையுண்டு, தந்தை வழி உறவினர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர்.

**துலாம்** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது. சேமிப்புகள் குறைவடையும், மனதில் கவலைகள் தோன்றி மறையும், ஆரோக்கியக் குறைவு காணப்படும்.

**விருச்சிகம்** நண்பர்கள் மூலம் சுபசெய்திகள் வந்து சேரும் நாள், பாடுபட்டு வேலை செய்ததிற்கான பலன் இன்று கிடைக்கும், தொழில் முன்னேற்றத்திற்காக புதிய நண்பர்களை சேர்த்துக்கொள்வீர்கள்.

**தனுசு** இனத்தார் பகைமாற எடுத்த முயற்சி வெற்றிபெறும், வருங்காலத்தைப் பற்றிய சிந்தனை மேலோங்கும், கடன் பிரச்சினைகளை மாற்றியமைப்பீர்கள், தேகநலன் சீராகி உற்சாகத்தைக் கொடுக்கும்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், மாற்றினத்தவரின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், பிள்ளைகளால் உதிரி வருமானங்களுண்டு, சொத்துக்களிலிருந்து இலாபம் கிடைக்கும்.

**கும்பம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், பொதுவாழ்வில், மதிப்பும், மரியாதையும் உயரும், தாய்வழி ஆதரவு கிட்டும், வாகனத்தை ஒழுங்குபடுத்தும் எண்ணம் மேலோங்கும்.

**மீனம்** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், நேற்றைய பிரச்சினை இன்று முடிவுக்கு வரும், ஆதரவுக்கரம் நீட்டுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

வளவன்

# நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் தீ விபத்து

(கொழும்பு)

புத்தளம் நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்து கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புத்தளம் நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் நேற்றுக் காலை தீ விபத்து ஏற்பட்டது.

இதன் காரணமாக அப் பிரதேசம் முழுவதும் புகை மண்டலமாக காணப்பட்டது. இத் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதில் கடற்படையி னரும் விமானப்படையினரின் ஹெலிகொப்டர்களும் ஈடுபடுத்தப்பட்டனர். இத் தீ விபத்தில் எவருக்கும் சேதம் ஏற்படவில்லை என தெரி விக்கப்படுகிறது. (ஶ்ரீ-2)

# சட்டவிரோத மின்சாரம் பெற்ற 91 பேர் கைது


அக்கரைப்பற்றுப் பொலிஸ் பிரிவில் இருந்து சட்ட விரோதமான முறையில் மின்சார இணைப்பை பெற்றிருந்த 91 பேர் கைது செய்யப்பட்டி ருந்தனர்.

கொழும்பு மின்சார சபை தலைமைக்காரியாலயத்தில் இருந்து வருகை தந்த குழுவினர் நேற்று அதிகாலை 4 மணி முதல் அக்கரைப்பற்று, ஆலையடி வேம்பு, அட்டாளைச் சேனை பிரதேசங்களில் மேற்கொண்ட சுற்றி வளைப்புகளின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை அக்கரைப்பற்று நீதவானிடம் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஶ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 110 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 110 | 130 | 80 |
| தக்காளி | 70 | 100 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 |
| கோவா | 60 | 80 | 70 |
| கரட் | 70 | 80 | 60 |
| பூசணி | 40 | 50 | 30 |
| புடோல் | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 70 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 60 |
| பாகற்காய் | 140 | 150 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 50 |
| கருணைக் கிழங்கு | 50 | 70 | 60 |
| பயற்றங்காய் | 100 | 100 | 100 |
| லீக்ஸ் | 120 | 140 | 100 |
| பீற்றூட் | 40 | 50 | 40 |
| கறிமிளகாய் | 120 | 120 | 60 |
| முருங்கைக்காய் | 120 | 140 | 120 |
| போஞ்சி | 120 | 140 | 150 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | 50 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 100 | 100 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40-45 | 40 |





சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையில் அண்மையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.மகாலிங்கம், உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன், பாடசாலை அதிபர் செல்வி த.பொன்னம்பலம், ஓய்வுபெற்ற அதிபர் வி.ஏரம்பமூர்த்தி, பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் க.கந்தசாமி ஆகியோர் மாணவர்களின் அணிவகுப்பை ஏற்றுக்கொள்வதையும் மாணவர்களின் உடற்பயிற்சி நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சுன்னாகம் நிருபர்)

# கொடிகாமம் -யாழ். பஸ் சேவையை அதிகரிக்குமாறு மாணவர்கள் கோரிக்கை

கொடிகாமத்திலிருந்து காலை 7.15 மணிக்கு யாழ். தொழில் நுட்ப கல்லூரி மாணவர்களையும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களையும் ஏற்றிக்கொண்டு பயணிக் கும் இ.போ. சபைக்குச் சொந்தமான பேருந் தானது செம்மணி ஊடாக திருநெல்வேலிச் சந்தியை வந்தடைந்து பின்னர் யாழ்ப்பா ணத்தைச் சென்றடைகின்றது.

பெரும் எண்ணிக்கையிலான மாணவர் கள் இப்பேருந்தில் பயணிப்பதால் நெரிசல் தற்போது ஏற்பட்டுள்ளது.

அத்துடன் நெரிசல் காரணமாக நாவற் குழி பகுதியில் உள்ள மாணவர்களும் ஏறிச் செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனவே இவ் வீதியூடாக இரு பேருந்து சேவையினை மேற்கொள்ளுமாறு சம்பந்தப் பட்ட அதிகாரிகளிடம் யாழ். பல்கலைக்கழக மற்றும் தொழில்நுட்ப கல்லூரி மாணவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-2-37)

# சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்குட்பட்ட 29 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச செயலகத்துக் குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 29 பயனாளி களுக்கு நேற்று முன்தினம் யுனிசெப் நிறுவனத்தால் உதவிகள் வழங்கப்பட்டது.

தென்மராட்சிப் பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் திருமதி ஆர்.ரகுநாதன் தலைமையில் சாவகச்சேரி பிரதேச செயல கத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதில் தையல் இயந்திரம் 7 பேருக்கும் துவிச்சக்கரவண்டி 16 பேருக்கும் பலச ரக்குக் கடை நடத்துவதற்கான நிதி இரண்டு பேருக்கும் கோழி மற்றும் மாடு வளர்ப்பிற்கு தலா 2 பேருக்கு நிதி உதவி என்பன வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், சிறப்பு விருந்தி னராக யுனிசெப் திட்ட உதவியாளர் த.நேசன், தென்மராட்சிப் பிரதேச செயலாளர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக் கது. (ஸ்ரீ-29)




# சனசமூக நிலைய கட்டட நிர்மாண பணிகள் பூர்த்தியடையாத நிலையில்

(பருத்தித்துறை)

புலோலி மத்தி கிராம சேவகர் பிரிவி லுள்ள அவ்வொல்லை இளைஞர் சனசமூக நிலைய கட்டட நிர்மாணப் பணிகள் முழு மையாகப் பூர்த்தியடையாது காணப்படுவ தால் அப்பகுதி மக்கள் கவலை அடைந்துள் ளனர்.

இவ் சனசமூக நிலையமானது மேல் மாடியைக் கொண்ட கட்டடமாக அமைக் கப்பட்ட போதிலும் இதுவரை முழுமையாகப் பூர்த்தி அடையாத நிலையில் காணப்படு கிறது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இச்சன சமூக நிலையக் கட்டடத்ததை முழுமை யாகப் பூர்த்தி செய்வதற்கான ஏற்பாடு களை செய்து தர வேண்டும் என அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-10)

# குப்பை கூழங்கள் அகற்றப்படாமையினால் பல்வேறு நோய்கள் பரவும் அபாயம்

(பருத்தித்துறை)

வடமராட்சியின் பல பகுதிகளிலும் குப்பை கூழங்கள் அகற்றப்படாமல் காணப் படுகிறது. குறிப்பாக வீதியோரங்களிலும் வீடுகளுக்கு முன்பாகவும் குப்பை கூழங் களைக் கொண்ட பொதிகள் காணப்படுகின் றன.

கடந்த காலங்களில் இப் பகுதியில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்திருந் தது.

டெங்குநோய் ஒழிப்பு நடவடிக்கைகள் துரிதமடைந்து வருகின்றபோதிலும் அந்நத்த இடங்களிலும் குப்பை கூழங்கள் மற்றும் தகரங்கள் போன்றவை அகற்றப்படாமல் காணப்படுவதால் மக்கள் மத்தியில் அச்ச நிலை காணப்படுகிறது.

அடுத்துசில தினங்களில் பருவகால மழை ஆரம்பிக்கப்பட இருப்பதால் குப்பை கூழங்கள் விரைவாக அப்புறப்படுத்த சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. (ஸ்ரீ-10)

# கால்நடைகளின் தொல்லையால் பாதிக்கப்படும் விவசாயிகள்

## முள்வேலி. அமைத்து தருமாறு கோரிக்கை

(தனங்கிளப்பு)

கடந்த 1999ஆம் ஆண்டு யுத்தம் கார ணமாக தனங்கிளப்பு, மறவன்புலோ ஆகிய பகுதிகளிலுள்ள மக்களினால் கைவிடப்பட்ட நிலங்களில் இம் முறை 500 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களில் நெற் பயிர்ச்செய்கை இடம்பெற்று வருகின்றது.

இந் நெற் பயிர்ச்செய்கை நிலங்களை கால்நடைகளிடம் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு சென்ற வருடம் போரூட் நிறுவனத்தினால் முட்கம்பி வேலி அமைத் துக் கொடுக்கப்பட்டது.

இவ்வேலி தற்போது அழிவடைந்து காணப்படுகின்றது.

எனவே இப் பாரிய நெற்பயிர்ச்செய்கை நிலபரப்பினை கால் நடைகளிடம் இருந்து பாதுகாப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுக்கின் றனர். (ஸ்ரீ-37)

# சாவகச்சேரி பிரதேச செயலராக திருமதி சாந்தசீலன் பொறுப்பேற்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச செயலாளராக திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் நேற்று முன்தினம் கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டுள் ளார்.

இதற்கு முன்னர் யாழ்ப்பாண பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலராக கட மையாற்றிய இவர் தற்போது சாவகச்சேரி பிர தேச செயலராக பதவி உயர்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சாவகச்சேரி பிரதேச செய லாளராக கடமையாற்றிய செ.ஸ்ரீநிவாசன் தற் போது பதவியுயர்வுடன் கிளிநொச்சி மேல திக அரசாங்க அதிபராக கடமையை பொறுப் பேற்றுக்கொண்டுள்ளார்.

(ஸ்ரீ-29)






மண்டைதீவு பிரதான பாதை 20 வருடங்களின் பின் பொதுமக்களின் பாவனைக்காக நேற்றுக் காலை 8 மணிக்கு திறந்து விடப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா நாடாவை வெட்டி பாதையைத் திறந்துவைப்பதையும் அப் பாதையூடாக விருந்தினர்கள் மற்றும் பொதுமக்கள் பயணிப்பதையும் பேருந்துச் சேவை ஆரம்பித்து வைக்கப்படுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட மக்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

## பிரித்தானிய பிரமுகர்களுடன் அமைச்சர் பீரிஸ் சந்திப்பு

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பிரித்தானியாவிற்கான தனது விஜயத்தின் போது வெளிவிவகார செயலாளர் வில்லியம் ஹேக் மற்றும் பாதுகாப்பு செயலாளர் லியாம் பொக்ஸ் ஆகியோரைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

கன்சவேட்டிவ் மற்றும் லிபரல் கட்சிகள் இணைந்த பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சர்கள் இலங்கை அமைச்சரை சந்திக்கும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

இந்த சந்திப்பின் போது இரு தரப்பு உறவுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளதுடன் குறிப்பாக மீள்குடியேற்றம், உட்கட்டமைப்பு அபிவிருத்தி குறித்து விரிவாக ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்புக்களின் போது இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து பிரிட்டிஷ் தலைவர்களுக்கு விரிவான விளக்கம் அளிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## புலிகளின் குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டோரின் உறவினர்கள் இழப்பீடுகோரி வழக்குத் தாக்கல்

### விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அமெ.நீதிமன்றம் தீர்மானம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் குண்டு தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் 22 கோடியே 50 இலட்சம் ரூபாவை புலிகளின் மூன்று முகவர்களிடம் இருந்து இழப்பீடாக கோரி அமெரிக்காவின் நியூஜேர்சி நீதிமன்றத்தில் தாக்கல் செய் துள்ள வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மாவட்ட நீதிபதி டெனிஸ் கெவனா தீர்மானித்துள்ளார்.

இந்த வழக்கின் பிரதிவாதிகளாக புலிகளுக்கு நிதியுதவிகளை வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள அமெரிக்காவின் கோடீஸ்வர வர்த்தகரான ராஜ் ராஜரட்னம் அவரது தந்தை ஜேசுதாசன் ராஜரட்னம் மற்றும் தமிழர் புனர்வாழ்வு கழகம் ஆகிய தரப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

தமக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கை தள்ளுபடி செய்யுமாறு பிரதிவாதிகளான ராஜ் ராஜரட்னம் மற்றும் ஜேசுதாசன் ராஜரட்னம் ஆகியோர் தாக்கல் செய்த மனுவை நீதிபதி நிராகரித்துள்ளதாக இலங்கையர்கள் சார்பில் ஆஜராகி வரும் சட்டத்தரணி மைக்கல் எல்ஸ்தர் தெரிவித்துள்ளார்.

நுகேகொட தொடரூந்து நிலையம், வெலிவேரிய, பிலியந்தல, கஸ்கிசை போன்ற இடங்களில் விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட குண்டு தாக்குதல்களில் தமது உறவினர்களை இழந்த 30 பேர் இணைந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

அமெரிக்க நீதிமன்றத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கான சாட்சி ஆதாரங்களை இலங்கை புலானாய்வுப் பிரிவில் சேவையாற்றி ஓய்வுபெற்ற பொலிஸ் பரிசோதகர் லயனல் முனசிங்க பெற்றுக்கொடுத்துள்ளார்.

புலிகளின் நடவடிக்கைகளுக்கு ராஜ் ராஜரட்னம் மற்றும் அவரது தந்தை ஆகியோர் இரண்டு கோடி அமெரிக்க டொலர்களை வழங்கியமைக்கான சாட்சியங்கள் இந்த வழக்கில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர்கள் தற்கொலை குண்டுதாக்குதல்களை நடத்த நிதியுதவியளித்துள்ளதாக மனுதாரர்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

## மாணவர் போராட்டங்களின் மூலம் குழப்பத்தை ஏற்படுத்த சிலர் முயற்சி

### பாதுகாப்பு செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

மாணவர் போராட்டங்களின் மூலம் நாட்டில் குழப்பதை ஏற்படுத்த சில சக்திகள் முயற்சி மேற்கொண்டு வருவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மிகவும் கடினமான போராட்டத்தின் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள ஸ்திரத்தன்மையை சீர் குலைப்பதற்கு சிலர் முயற்சிப்பதாகவும் இவ்வாறான தீய சக்திகளின் பொறியில் மாணவர்கள் சிக்கிவிடக்கூடாதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் மாணவர்களின் ஒழுக்கம் சீர்குலைந்துள்ளதாகவும் இதன் ஓர் கட்டமாகவே ருஹுணு பல்கலைக்கழக துணை வேந்தர் தாக்கப்பட்டதாகவும் இவ்வாறான விடயங்களை பெற்றோர் பிள்ளைகளிட மிருந்து எதிர்பார்க்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ரன்தெம்பை கெடட் கல்லூரியில் உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எட்டு ஆண்டுகளாக தாம் அமெரிக்கப் பல்கலைக்கழகமொன்றில் கடமையாற்றியதாகவும் அங்கு இவ்வாறான பகிடிவதை சம்பவங்களையோ வகுப்பு பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளையோ தாம் காணவில்லை எனவும் பெருமளவு பணத்தை செலுத்தி பல்கலைக்கழகங்களில் கல்வி பயில்வதனால் அவர்கள் போராட்டங்களில் ஈடுபட முனைவதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாணவர்களுக்கு கல்வியை புகட்டுவதற்காக மக்களின் வரி வருமானத்தை அரசாங்கம் பயன்படுத்தி வருவதாக தெரிவித்த அவர் துரித கதியில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் சமூகங்கள் ஒழுக்கமுடடையதாக காணப்படுகின்றதென குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## உள்ளூராட்சி மன்ற திருத்தங்களை துரித கதியில் அமுல்படுத்தக்கூடாது

### முஸ்லிம் காங்கிரஸ் அரசிடம் கோரிக்கை

உள்ளூராட்சி மன்ற திருத்தச் சட்டங்களை துரிதகதியில் அமுல்படுத்தக் கூடாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அடுத்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்கு வைத்து அவசர அவசரமாக திருத்தங்கைள மேற்கொள்ளக் கூடாது என கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

குறித்த உள்ளூராட்சி சட்டத் திருத்தங்களில் சில ஆரோக்கியமான கருத்துக்கள் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் சமர்ப்பிக்கப்பட்ட சில யோசனைத் திட்டங்களை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் அதற்கு நன்றி பாராட்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தச் சட்டத்தில் சில விடயங்கள் குறித்து மேலும் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுயேட்சைகுழு வேட்பாளர்கள் இதுவரை காலமும் 250 கட்டுப்பணம் செலுத்தி வந்த போதிலும் தற்போது அந்தக் கட்டணம் 20 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளதா அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்படும் பொது அமைப்புக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை எனவும் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தற்போது வெளிநாடு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் நாடுதிரும்பியதன் பின்னர் இந்த விடயம் குறித்து ஜனாதிபதியுடன் பேச்சு வார்த்தை நடத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஜனாதிபதி பூர்த்தி செய்வார்

### பிரபாகணேசன் எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பூர்த்தி செய்வார் என ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

முதலாவது ஆட்சிக் காலத்தின் போது ஜனாதிபதி பயங்கரவாதத்தை இல்லா தொழித்ததாகவும் இரண்டாவது தவணைக் காலத்தில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவார் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஆளும் கட்சியை விமர்சனம் செய் வதனை விடவும் அபிவிருத்திப் பணிகளில் இணைந்து செயற்படுவதே புத்திசாதுரியமானதென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். கொழும்பு நகரின் சேரிப்பகுதிகளை அழிப்பதில் தவறில்லை எனவும் உலகின் ஏனைய நாடுகளின் தலைநகரங்களைப் போன்று கொழும்பின் உட்கட்டுமான வசதிகளையும் மேம்படுத்த வேண்டியது அவசியமானது எனவும் கடந்த காலங்களில் பயங்கரவாதத்தை காரணம் காட்டி அபிவிருத்திப் பணிகள் ஸ்தம்பிதமடைந் திருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். அப்பாவி சேரிப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் அரசாங்கம் செயற்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் சம உரிமைகளுடன் வாழக் கூடிய பின்னணி உருவாகியுள்ளதெனவும் ஐக்கிய தேசியக் கட்சி வங்குரோத்து அடைந்துள்ளதாகவும் யுத்தம் உச்ச கட்டத்தை அடைந்த காலங்களில் அக்கட்சி பிரபாகரனுக்கு ஆதரவளித்ததாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

குற்றச் செயல்களில் ஈடுபட்டமைக்காக சரத் பொன்சேகா தண்டனை அனுபவித்து வருவதாகவும் சரத்பொன்சேகா விடுதலை செய்யப்பட்டால் ஏனைய குற்றவாளிகளும் விடுதலை செய்யப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு -கிழக்கு அபிவிருத்தி பணிகளை ஒரே இரவில் பூர்த்தி செய்ய முடியாது எனவும் அதற்கு ஓரளவு கால அவகாசம் தேவைப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

## பஸ்களில் கடும் நெரிசல்; பொதுமக்கள் பெரும் சிரமம்

(பூநகரி)

கிளிநொச்சி பஸ் நிலையத்தில் இருந்து இராமநாதபுரம், கல்மடுநகர், வட்டக்கச்சி ஆகிய இடங்களுக்குச் செல்லும் பேருந்துகளில் கடும் நெரிசல் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இப்பேருந்துகளில் பயணிக்கும் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக அப்பகுதி பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

மற்றும் இப்பிரதேசத்தில் இருந்து அரசாங்க ஊழியர்கள் வேலைநாட்களில் அலுவலகத்திற்கு தமது கடமைகளுக்குச் சென்று திரும்புவதற்கு பெரும் சிரமப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே இப்பிரதேசத்திற்கு கூடுதலான பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்தி நெருக்கடியை குறைப்பதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-84)

## இந்தியாவிலிருந்து திரும்பும் இலங்கை அகதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

தமிழ் நாட்டிலுள்ள முகாம்களிலிருந்து மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பும் இலங்கை அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக ஐ.நா.வின் புதிய புள்ளி விபரவியல் அறிக்கை மூலம் தெரிய வந்துள்ளது.

யுத்தம் முடிவடைந்த பின்னர் இலங்கையில் எந்த வன்முறைச் சம்பவங்களும் இடம் பெறாதுள்ள நிலையில் தமது சொந்த இடங்களுக்கு திரும்பும் இலங்கை அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்தம் இடம் பெற்ற காலப் பகுதியில் இலங்கையின் வடக்கு- கிழக்குப் பகுதிகளிலிருந்து இந்தியாவிற்கு தப்பிச் சென்ற 67 பொதுமக்களைக் கொண்ட குழு ஒன்று அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் சபை முகவர் நிலையத்தின் உதவியுடன் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பியுள்ளது.

இரு நாட்களுக்கு முன்னர் தமது சொந்த இடங்களுக்கு திரும்பியுள்ள இந்த அகதிகள் இந்தியாவிலுள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை முகவர் நிலையத்தின் உதவியை நாடியுள்ளனர்.

இந்தியாவிலுள்ள 112 முகாம்களில் 71 ஆயிரத்து 654 இலங்கை அகதிகளும் வெளியிடங்களில் 32 ஆயிரத்து 467 இலங்கை அகதிகளும் தங்கியுள்ளதாக கடந்த யூலை மாதம் வரையில் இந்திய அரசாங்கத்தின் புள்ளி விபரவியல் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)





Bren Security (Pvt) Ltd நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளை 187/30, யூனியன் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி (எதிரில்) அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மேஜர் திஸ்ஸ அளுவிகார, Oriflam நிறுவன நிர்வாக இயக்குநர் ம்ார் ரென்சன் உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் நிறுவன நிர்வாக இயக்குநர் மேஜர் திஸ்ஸ அளுவிவகார மங்கல விளக்கேற்றுவதையும் படங்களில் காணலாம்.

# வன்னி மக்கள் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர்

## வன்னித் தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

உறவினர்களுடன் வாழும் இடம்பெயர்ந்த மக்களுக்கு முக்கியமான வாழ்வாதார வழிகள் இல்லை என்பதால் அவர்கள் தம்மிடமிருக்கும் தங்க ஆபரணங்களை விற்று தமது உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்து வருவதாக வன்னி தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் குறைந்தளவான உணவுகளையே உட்கொள்ளுவதாகவும், கடன்களைப் பெற்று வாழும் நிலையை அவர்கள் எதிர்நோக்கியிருப்பதாகவும் உலக உணவுத் திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட உணவுப் பாதுகாப்பு மீளாய்வுப் புள்ளிவிபரத்தில் கண்டறியப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு விடுத்துள்ள புதிய மனிதாபிமான கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களில் 16 வீதமானாவர்கள் குடும்பப் பெண்களாவர். 9 வீதமானவர்கள் கணவனை இழந்தவர்கள். இந்தக் குடும்பங்களுக்குத் தேவையான 96 வீதமான அரிசித் தேவையைப் பெற்றுக்கொடுப்பது உலக உணவுத் திட்டமாகும்.

எனினும், உலக உணவுத் திட்டத்திடம் எதிர்நோக்கியுள்ள நிதிப் பற்றாக்குறை காரணமாக உணவுப் பொருட்களின் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் பாடசாலை மாணவர்கள் உட்பட 2 இலட்சத்து 80ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நிதி நெருக்கடி காரணமாக ஊதியங்களைப் பெற்றுக்கொடுக்க முடியாத நிலையில் தொண்டர் ஊழியர்களின் தட்டுப்பாடும் நிலவுவதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஶ்ரீ-2)

# நுண்கலை பட்டதாரிகளை

## ஆசிரிய சேவையில் இணைத்து கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை

(கொழும்பு)

நுண்கலை பட்டதாரிகளை ஆசிரிய சேவையில் இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை அடுத்த மாதம் நடைபெறவுள்ளது.

பாடசாலைகளில் கல்வி கற்பிக்கக் கூடிய ஆற்றல் தொடர்பாக இந்த நேர்முக பரீட்சை இடம்பெறும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.சிறிசேன தெரிவித்தார்.

இந்தப் பட்டதாரிகளை விரைவில் சேவையில் இணைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஶ்ரீ-6)

# ஜனநாயக மக்கள் முன்னணியின் தொழிற்சங்க செயலாளர் கைது

(கொழும்பு)

ஜனநாயக மக்கள் முன்னணியின் தொழிற்சங்கப் பிரிவு செயலாளர் எல்.பாரதிதாசன் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு உதவிய குற்றச்சாட்டின் காரணமாக அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் கூறினர்.

இதேவேளை ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தற்போது வெளிநாட்டுப் பயணமொன்றை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ-2)

# இலங்கைக்கு விஜயம் செய்வதற்கான அனுமதி கேட்டு எந்த வேண்டுகோளையும் முன்வைக்கவில்லை

## ஐ.நா. நிபுணர் குழுவின் தலைவர் தெரிவிப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான்கீ மூனினால் நியமிக்கப்பட்ட இலங்கை தொடர்பில் ஆலோசனை வழங்கும் குழுவினரை இலங்கைக்குள் அனுமதிப்பதற்கான எந்தவேண்டுகோளையும் இலங்கை அரசிடம் இதுவரை முன்வைக்கவில்லையென நிபுணர் குழுவின் தலைவரான மர்சுகி தருஸ்மன் தெரிவித்துள்ளார்.

குறைந்தது ஓர் உறுப்பினரையாவது இலங்கைக்கு அனுப்புவது தொடர்பில் தற்போது கலந்துரையாடப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார் என இன்னர்சிற்றி பிரஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இன்னர்சிற்றி பிரஸ் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் சம்பந்தமாக ஆலோசனை பெறும் நோக்கில் ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டதும், கடந்த 18 ஆம் திகதியன்று அமைதியான முறையில் ஆரம்பிக்கப்பட்டு எழுத்துமூல சாட்சியங் களைக் கோரியுள்ளதாகக் கூறப்படும் ஐ.நா. நிபுணர் குழுவை உண் மையில் காணக் கிடைக்கவில்லை.



ஆயினும் வட கொரியா பற்றி கடந்த 22 ஆம்திகதி நடைபெற்ற ஐ.நா.வின் கூட்டமொன்றில் மேற்படி நிபுணர் குழுத் தலைவரான மர்சுகி தருஸ்மன் மற்றும் அதன் தலைமை அலுவலரான ரிச்சார்ட் ஸனெற் ஆகிய இருவரையும் இன்னர்சிற்றி பிரஸ் சந்தித்து உரையாடியது.

மேற்படி குழுவின் செயற்பாடுகளை முன்னெடுக்கும் பொருட்டு, இலங்கைக்கு விஜயம் செய்வதற்கான அனுமதி கேட்டு விண்ணப்பம் ஏதும் அனுப்பப்பட்டுள்ளதா என இன்னர்சிற்றி பிரஸ் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த தருஸ்மன் இதுவரை அத்தகைய விண்ணப்பமெதுவும் அனுப்பப்படவில்லை என்றார்.

அத்தகைய வேண்டுகோள் ஒன்றை இலங்கை அரசிடம் விடுக்கும் பட்சத்தில், நிபுணர் குழுவின் குறைந்தது ஒரு உறுப்பினரையாவது அங்கு அனுப்ப வேண்டியதன் அவசியம் பற்றி பிரஸ்தாபித்த வேளை, அதுபற்றி தாங்கள் தற்போது கலந்துரையாடி வருவதாகவும் தருஸ்மன் கூறினார்.

அதன்பின்னர், மேற்படி நிபுணர் குழு அதிகாரியான ரிச்சார்ட் ஸனெற்றைச் சந்தித்த இன்னர்சிற்றி பிரஸ், எழுத்துமூல சாட்சியங்களைக் கோரும் அறிக்கை ஏன் ஐ.நா.வின் இணையத்தளத்தில் இதுவரை வெளியாகவில்லை எனவும்,வேறெந்த வகையிலும் பகிரங்கப்படுத்தப்படவில்லை என வும் கேட்டதற்கு,தொழில்நுட்பக் கோளாறே பிரதான காரணமெனக் கூறிய ஸனெற் ஐ.நா.வின் இணையத்தளம் ஊடாகவே அவை வெளியிடப்படுதல் பொருத்தமானதெனவும் கூறினார். இனிமேலாவது ஐ.நா.வின் நிபுணர் குழுவின் பணிகள் பற்றிய தகவல்களை தமக்கு அனுப்புமாறு இன்னர்சிற்றி பிரஸ் ஸனெற்றிடம் கேட்டுக்கொண்டது.

அதேவேளையில் ஐ.நா.செயலாளர் பான் கீ மூன் தென்கொரியத் தலைநகரான சியோலில் நடைபெறவுள்ள ஜீ-20 நாடுகளின் கூட்டம் பற்றிய ஐ.நாவின் இறுதிநாள் அமர்வில் உரையாற்றிக்கொண்டிருந்தார்.

கடந்த மாதம் நியூயோர்க்கில் நடைபெற்ற ஐ.நா.பொதுச்சபைக்கூட்டத்தில் விவாதிக்கப்படாத ஐ.நா செயலரின் இரண்டாவது பதவிக்கால நீடிப்பிற்கான ஆதரவுகோருதல், ஜீ-20 நாடுகளின் பொதுக்கூட்டத்தின்போது இடம்பெறவுள்ளதாகவும் அறிய வருகிறது.

அத்துடன், இலங்கைக்கான ஐ.நா.வின் நிரந்தரப் பிரதிநிதியான பாலித கோஹனவை மாநாட்டு அறையில் சந்தித்த இன்னர்சிற்றி பிரஸ், தருஸ்மனோ அல்லது நிபுணர் குழுவோ, இலங்கைக்கான தமது விஜயம் குறித்து விண்ணப்பிக்கும் பட்சத்தில் அது இலங்கை அரசால் அனுமதிக்கப்படுமா என வினவிய போது, முதலில் அவர்கள் எம்மை எழுத்து மூலம் கேட்கட்டும், அதன்பின்னர் எமது நிலைப்பாடு மாற்றமடையக் கூடும் எனவும் அவர் கூறினார். (ஶ்ரீ-2)

# தமிழீழ இராச்சியத்தை வீழ்த்த அமெரிக்க உதவி பெறப்படும்

## அரசு அறிவிப்பு

(கொழும்பு)

நாடு கடந்த தமிழீழ இராச்சியத்தை வீழ்ச்சியடையச் செய்ய அமெரிக்காவின் உதவி பெற்றுக்கொள்ளப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

வெளிநாடுகளில் இயங்கிவரும் நாடு கடந்த இராச்சியம் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளின் சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த அமெரிக்க எப்.பி.ஐ புலனாய்வுப் பிரிவின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்பட உள்ளதாக சிங்கள பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் நோக்கில் அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகளுடன் இணைந்து விசேட நடவடிக்கைகள் எடுப்பது குறித்து இரு நாட்டு தூதுவராலயங்களும் முயற்சி மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் சர்வதேச வலையமைப்பு மற்றும் நடவடிக்கைகள் குறித்து அமெரிக்காவிற்கு சரியான முறையில் தெளிவுபடுத்தவும் தகவல்களை பரிமாறிக் கொள்ளவும் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதரகம் நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகளின் சர்வதேச வலையமைப்பு வெவ்வேறு பெயர்களில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

அரசசார்பற்ற நிறுவனங்கள், அரசியல் அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் விடுதலைப்புலிகள் இயங்கி வருவதாகவும் அமெரிக்காவிலும் புலிகள் செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் வலையமைப்பு செயற்பாடுகள் குறித்து தெளிவுபடுத்த வேண்டியது தூதுவராலயத்தின் கடமையாகும் என தூதுவர் ஜாலிய விக்ரமசூரிய தெரிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

# போதைப்பொருட்கள் விற்பனை செய்த 3 வர்த்தகர்கள் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

கல்முனையில் கஞ்சா கலந்த 5ஆயிரத்து 500 மதன கோகன அபின் லேகிய பைக்கற்றுக்களை விற்பனை செய்த 3 வர்த்தகர்களை நேற்று முன்தினம் மாலை களுவாஞ்சிக்குடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கல்முனை பொதுச் சந்தைக்குள் இரு வர்த்தக நிலையங்களைச் சுற்றிவளைத்த போதே இவ் வர்த்தக நிலையங்களிலிருந்து இப்போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.ஆர்.மானவடு தெரிவித்தார்.

220 பெட்டிகளில் குறித்த மதன லேகியங்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் இதன் பெறுமதி சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# யுத்தத்தால் சேதமடைந்த வீடுகளை திருத்தி அமைப்பதற்கு கொடுப்பனவு

(கொழும்பு)

யுத்த காலத்தின் போது கிளிநொச்சி மாவட்டத்தில் சேதமடைந்த வீடுகளைத் திருத்தி அமைப்பதற்கான முதல் கட்டக் கொடுப்பனவு நேற்று முன்தினம் வழங்கப்பட்டது. கிளிநொச்சியில் இது தொடர்பான நிகழ்வு இடம்பெற்றது.

புனர்வாழ்வு, சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு அமைச்சர் டியூகுணசேகர சேதமடைந்த வீடுகளின் உரிமையாளர்கள் 500 பேருக்கு இதற்கான காசோலைகளை வழங்கி வைத்தாரென கிளிநொச்சி அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சேதமடைந்த ஒவ்வொரு வீட்டையும் திருத்துவதற்காக தலா ஒரு இலட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இதன் ஒரு கட்டமாக 50 ஆயிரம் ரூபா வீதம் அன்றைய தினம் வழங்கப்பட்டது. திருத்த வேலைகளின் முன்னேற்றத்தின் அடிப்படையில் மிகுதியான 50 ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)




உன்னத சேவைக்காக இணைந்துள்ள குழுவினர்

வேலணை மக்களே, இன்று முதல் உங்கள் சகல வங்கி அலுவல்களையும் கவனிக்கவிருக்கும்
இந்த வெற்றி அணிக்கு நல்வரவு கூறுங்கள்.


இன்று திறந்துவைக்கப்படும் எமது 199ஆவது வாடிக்கையாளர் நிலையத்தின் அச்சாணியாக விளங்கும்
இத் தொழில் நிபுணர்கள் உங்களுக்கு அதிசிறந்த வங்கிச் சேவைகள் கிடைப்பதை உறுதிப்படுத்துவார்கள்.


HNB வேலணை, குறிகாட்டுவான் வீதி, வேலணை.
எமது வங்கிச் சேவைகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்:
021-4920322 அல்லது 021-4920324


HNB


HNB உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

SAATCHI & SAATCHI









யாழ்.பல்கலைக்கழக கணக்கியல் துறைத்தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பியின் பாராட்டுவிழா நீர்வேலி அகத்தியார் இந்துக்கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் இ.குணநாதன் தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் பேராசிரியர் தம்பதியரை நீர்வைமணி கு.தியாகராஜக்குருக்கள் வரவேற்பதையும் பேராயர் சு.ஜெபநேசன்,அமுதசுரபிக் கலாமன்றக் காப்பாளர் சட்டத்தரணி சி.சிவநேசன் ஆகியோர் மங்கலவிளக் கேற்றுவதையும் பேராசிரியர் க.சிவானந்தமூர்த்தி, அச்சுவேலி மத்திய கல்லூரி அதிபர் வே.பாலசுப் பிரமணியம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவதையும் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா பொன் னாடை போர்த்துவதையும் சமூகஜோதி த.பரராசசிங்கம் வாழ்த்துப்பா வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## சண்டேலீடர் பிரதம ஆசிரியருக்கு முக்கிய பிரமுகருக்கான பாதுகாப்பு

(கொழும்பு)



முக்கிய பிரமுகர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு தனக்கு வழங்கப்பட்டுள்ளதாக சண் டேலீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் பெட்ரிகா ஜென்ஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பெட்ரிகா ஜென்ஸிடம் வினவிய போது, கடந்த வாரத்தில் பிரதான இணையத்தளங்கள் இரண்டில் தன்னைக் கொலை செய்வதற்கான திட்டங்கள் இருப்ப தாக செய்திகள் வெளியிட்டதை அடுத்து சண்டேலீடர் பத்திரி கையின் உரிமையாளர் லால் விக்ரமதுங் கவினால் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸ்மா அதிபர் தனக்கு இந்தப் பாதுகாப்பை வழங்கியிருப்பதாக தெரிவித்தார்.

இதனடிப்படையில் தனது வாகனத்திற் குப் பின்னால் செல்லும் வகையில் பாதுகாப்பு வாகனமொன்று தமக்கு வழங்கப்பட்டி ருப்பதாகவும் ஜென்ஸ் குறிப் பிட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் கருத்து தெரிவிக்கையில், டயலொக் தொலைக்காட்சி நிறுவ னத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறிக்கொண்ட சந்தேகத்திற்கிடமான இருவர் இரண்டு முறை தனது வீட்டிற்குள் நுழைய முயற்சித்ததாகவும் இது குறித்து டயலொக் நிறுவனத்திடம் கேட்ட போது, அவ்வாறான நபர்கள் தமது நிறுவனத்தில் பணியாற்றவில்லை எனத் தெரிவித்த தாகவும் ஜென்ஸ் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

## அரசாங்கம் மாகாண சபைகளுக்கு முழு அதிகாரம் வழங்க வேண்டும்

### கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

13ஆவது திருத்தச் சட் மூலத்தின் ஊடாக மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள முழு அதிகாரங்களையும் அரசாங்கம் வழங்க வேண்டு மென கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவ நேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

முழுமையாக அதிகாரங்களை வழங்குவ தன் மூலம் மட்டுமே பிரதேச மக்களின் இதயங் களை வென்றெடுக்க முடியும் என்று உண் மையைக் கண்டறியும் ஆணைக்குழுவிடம் சாட்சியமளித்த போது அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைக் கொண்டி ருப்பதாகவும் இதனால் தீர்வுத் திட்டங்களை முன்வைக்க முடியும் எனவும் அவர் தெரி வித்துள்ளார். கிழக்கு மாகாணத்தில் காணிப் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

யுத்த காலத்தில் பிரதேசத்தை விட்டு வெளி யேறியவர்கள் மீளவும் அதே காணிகளை கோர முடியாது எனவும் சில வேளைகளில் அவை வேறு நபர்களுக்கு வழங்கப்பட்டிருக் கலாம் எனவும் அவ்வாறான சந்தப்பங்களில் பிறிதொரு இடத்தில் இடம்பெயர்நதவர்கள் மீள் குடியேறுவதற்கு நடவடிக்கை எடுக்கப் படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சரியான காணி உறுதிகள் காணப்பட்டால் அவர்களுடைய காணிகளை வழங்குவதில் சிக்கல் இருக்காது என அவர் குறிப்பிட்டுள் ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜய வர்தனவும் ரணசிங்க பிரேமதாசவும் இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கு முனைப்பு காட்ட வில்லை எனவும் அவர்கள் தேசத்திற்கு துரோ கம் இழைத்துள்ளதாகவும் பிள்ளையான் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## பிரதான அமைச்சுக்களின் நிதிநிர்வாகம் தொடர்பில் ஜனாதிபதி நேரடிக் கண்காணிப்பு

பிரதான அமைச்சுக்களின் நிதி நிர்வாகம் தொடர்பில் ஜனாதி பதி நேரடிக் கண்காணிப்பு மேற் கொள்ளத் தீர்மானித்துள்ளார். பிரதான அமைச்சுக்களின் அதி காரிகளை அழைத்து நிதி கொடுக் கல் வாங்கல்கள் தொடர்பில் ஜனா திபதி விளக்கம் கோர்வுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெற்றோலிய வள அமைச் சின் நடவடிக்கைகள் குறித்து அதி காரிகளிடம் ஏற்கனவே விளக்கம் கோறப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப் படுகிறது. சில அமைச்சுக் களில் ஊழல் மோசடிகள் இடம்பெற்று வருவதாக தொடர்ச்சியாக சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்களுக்கு தீர்வு காணும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது. பெற்றோலியக் கூட்டுத்தாப னத்தில் நிர்வாக மோசடிகள் இடம் பெற்றுள் ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

இதேவேளை அமைச்சுக்க ளுக்கு சென்ற நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும் திட்டமொன் றையும் ஜனாதிபதி ஆரம்பித்துள்ளார். (ஸ்ரீ-2)

## இலங்கைக்கான வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகள் அதிகரிப்பு

சர்வதேச அழைப்புகளுக்கான வரியை 0.02 டொலரினால் அரசாங்கம் குறைத்ததையடுத்து இலங்கைக்கான வெளிநாட்டு தொலைபேசி அழைப் புகள் அதிகரித்துள்ளதாக தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட்ட தெரிவித்துள்ளார்.

இதனால் வி.ஓ. ஐ பி.முறையிலான அழைப்புகளுக்கும் தொலைபேசி வலையமைப்புகளுக்கும் இடையிலான இடைவெளி குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சட்ட விரோதமான முறையில் வி.ஓ.ஐ.பி. பாவனையைக் ஒழிப்பதற்காக இணைய சேவை வழங்குநர்கள் பதிவு செய்துகொள்ளுமாறு எதிர்காலத்தில் கோரப்படுவர்.ஆனால் ஏ.டி.எஸ். எல் தொடர்பை பயன்படுத்துவோர் இப் பதிவு முறையினால் பாதிக்கப்படமாட்டார்கள் எனவும் அனுஷ பெல்பிட்ட தெரி வித்துள்ளார். (ஸ்ரீ-2)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

2010இல் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சிறப்புப் புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த யாழ்/நல்லூர் அரசடியைச் சேர்ந்த



க.இரவீந்திரன் விமலா தம்பதிகளின் புதல்வியும் யாழ்/ பொஸ்கோ வித்தியாலய மாணவியுமான செல்வி இரவீந்திரன் மாதங்கி (150-புள்ளிகள்)



நிக்சன் சுபா தம்பதிகளின் புதல்வனுமான யாழ்/ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலய மாணவனுமான செல்வன் நிக்ஸன் ஜனுஸ்ரன் (148-புள்ளிகள்)



ப.சிவகுமார் நந்தினி தம்பதிகளின் புதல்வனும் யாழ்/ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலய மாணவனுமான செல்வன் சிவகுமார் சுஜீபன் (143-புள்ளிகள்)

பெற்று சித்தியடைந்துள்ளனர்.

இவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு இவர்களுக்கு ஊக்கமளித்த பெற்றோர் களையும், பாடசாலை அதிபர், ஆசிரியர் குழாத்தினையும் மற்றும் நலன் விரும் பிகளையும் பாராட்டுவதில் எமது ஜனசக்தி சனசமூக நிலையம் பெருமகிழ்ச்சி அடைவதோடு இவர்கள் கல்வியில் மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

நன்றி

(2723)




SOND நிறுவனத்தினால் யாழ்.மாவட்டத்தில் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்கும் வழிமுறை என்னும் கருப்பொருளிலான சிறப்பு ஆய்வரங்கம் அண்மையில் நடைபெற்றது.இதில் SOND நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் ச.செந்தூராசா ஆரம்ப உரையினை ஆற்றுவதையும் யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் பேராசிரியர் மா.சின்னத்தம்பி ஆய்வுரை ஆற்றுவதையும் யாழ்.பல்கலைக்கழக பொருளியல்துறை விரிவுரையாளர் ஆய்வுரை பற்றிய பின்னூட்டல் கருத்தினை நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

## விடுதலைப்புலிகளுடன் தொடர்புகளை பேணிய குற்றச்சாட்டில் மூவர் கைது

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புகளைப் பேணிய மூன்று பேர் தலவாக்கலையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மத்திய மாகாண பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்களில் ஒருவரிடமிருந்து இரண்டு ரீ.56 ரக துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களில் ஒருவர் மத்திய மாகாணத்தின் முன்னாள் அரசியல் தலைவர் ஒருவரின் நெருங்கிய ஆதரவாளர் என்பது விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளதாக மத்திய மாகாண பயங்கரவாதத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி நிமால் யட்டிவர தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணை நடத்தப்படவுள்ளதா கத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளைப் பேணிய சிலர் தலவாக்கலைப் பிரதேசத்தில் கைது செய்யப்பட்டதுடன் குண்டுகளும் மீட்கப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## வடமராட்சி கிழக்கிலுள்ள ஆலயங்கள் புனரமைப்பு செய்யப்படல் வேண்டும்

### சமூக ஆர்வலர்கள் வலியுறுத்து

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கு பிரதேசங்களில் யுத்தத்தால் சேதமடைந்த மற்றும் அழிவடைந்த இந்து ஆலயங்கள் மற்றும் கிறிஸ்தவ தேவலாயங்களை புதிதாக புனரமைப்புச் செய்ய உரிய தரப்பினர் முன்வர வேண்டும் என்று அப் பகுதியைச் சேர்ந்த சமூக சமய ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அண்மையில் மருதங்கேணி உதவி அரசாங்க பிரிவினரால் சேதடைந்த ஆலயங்கள், கிறிஸ்தவ தேவாலயங்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டன.

அவ் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்டு ஆலய புனரமைப்பு வேலைகளில் ஈடுபட வேண்டும் என அவர்கள் கோரியுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு பிரதேசங்களில் 9 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அண்மையில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட நிலையில் அவர்களின் இயல்பு வாழ்க்கை இன்றுவரை சுமுகமான நிலைமைக்கு திரும்பவில்லை. போரினால் அனைத்தையும் இழந்த மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

சேதமடைந்த ஆலயங்களில் புனித தெய்வச்சிலைகள், ஆலயங்களின் வரலாற்றுக் குறிப்புகள் அனைத்தும் களவாடப்பட்டு காணாமல் போயுள்ளன.

எனவே ஆலயங்களின் புனரமைப்புக்கு உரிய தரப்பினர் உதவ முன்வரவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-24)

## மட்டக்களப்பில் போதகர் ஒருவரின் பஸ் இனந்தெரியாத விஷமிகளால் தீ வைத்து எரிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள நாவற்கேணி பகுதியில் போதகர் ஒருவரின் 30 இலட்சம் ரூபா பெறுமதியான பஸ் ஒன்று கடந்த 22ஆம் திகதி இரவு விஷமிகளால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

குறித்த போதகர் வயோதிபர் இல்லம் இன்றினை அமைத்து வரும் காணியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ்வண்டியே இனம் தெரியாதோரால் தீ வைக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

சுவிசேஷ சபை உப தலைவரும் போதகருமான கணபதிப்பிள்ளை தெய்வேந்திரன் என்பவரால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பெருமளவு பாகங்கள் எரியுண்ட நிலையில் காணப்படும் இந்த பஸ் எரிப்பு சம்பந்தமாக மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஐ.எம்.கருணாரத்னவின் ஆலோசனைக்கமைய மட்டக்களப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இந்த பஸ் கொள்வனவு செய்யப்பட்டு இரண்டு மாதங்களே ஆகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 2010.10 25 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1147 - முதலாம் அஃபொன்சோ தலைமையில் போர்த்துகீசர் லிஸ்பன் நகரைப் பிடித்தனர்.
- 1415 - அஜின்கோர்ட் நகரில் இடம்பெற்ற போரில் இங்கிலாந்தின் ஐந்தாம் ஹென்றியின் படைகள் பிரான்சைத் தோற்கடித்தன.
- 1616 - அவுஸ்திரேலியாவில் கால்பதித்த இரண்டாவது ஐரோப்பியர் டச்சு கப்டன் டேர்க்தீவு அவரது பெயரால் அழைக்கப்படுகிறது.
- 1760 - மூன்றாம் ஜோர்ஜ் பெரிய பிரித்தானியாவின் மன்னனானான்.
- 1900 - ஐக்கிய இராச்சியம் தென்னாபிரிக்காவின் டிரான்ஸ்வால் மாநிலத்தை இணைத்துக்கொண்டது.
- 1918 - அலாஸ்காவில் பிரின்சஸ் சோஃபியா என்ற கப்பல் தாண்டதில் 353 பேர் கொல்லப்பட்டனர்.
- 1924 - இந்தியாவில் சுபாஷ் சந்திரபோஸ் பிரித்தானியரால் சிறைப்பிடிக்கப்பட்டார்.
- 1935 - கெயிட்டியில் சூறாவளி மற்றும் வெள்ளம் காரணமாக 2ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.
- 1936 -ஹிட்லர் மற்றும் முசோலினி இணைந்து ரோம்-பேர்லின் அச்சு என்ற கூட்டமைப்பை ஏற்படுத்தினர்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: பிலிப்பைன்சில் ஐக்கிய அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் வரலாற்றில் பெரும் கடற்சமர் இடம்பெற்றது.
- 1945 - இரண்டாம் உலகப்போர்: ஜப்பான் கூட்டு நாடுகளிடம் சரணடைந்ததைத் தொடர்ந்து சீனக் குடியரசு தாய்வானை இணைத்துக் கொண்டது.
- 1971 - ஐ.நா.விலிருந்து சீனக் குடியரசு வெளியேற்றப்பட்டு மக்கள் சீன குடியரசு ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- 1983 - ஐக்கிய அமெரிக்காவும் அதன் கரிபியன் கூட்டு நாடுகளும் கிரெனாடாவை முற்றுகையிட்டு அதனைக் கைப்பற்றின.
- 1991 - யூகொஸ்லாவிய இராணுவம் சில்வேனியாவில் இருந்து முற்றாக வெளியேறியது.
- 1995 - கொழும்பு கொலன்னாவை எண்ணெய்க் குதங்களில் இடம்பெற்ற பெரும் தீயில் 21 படையினர் கொல்லப்பட்டனர்.
- 2000 - பிந்துனுவேவா படுகொலைகள்: இலங்கையில் பண்டாரவளை, பிந்து னுவேவா சிறைகள் மீது நடத்தப் பட்ட தாக்குதலில் தமிழ் அரசியல் கைதிகள் 26 பேர் கொல்லப்பட்டனர்.
- 2001 - விண்டோஸ் எக்ஸ்பி வெளியிடப்பட்டது.
- 2001 - இந்தியாவில் தடா சட்டத்துக்கு பதிலாக பொடா என்ற புதிய பயங்கரவாத தடுப்பு சட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்தது. இந்த சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகள் உள்ளிட்ட 23 தீவிரவாத அமைப்புகளுக்கு மத்திய அரசு தடை விதித்தது.
- 2007 - சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் முதலாவது இரட்டை அடுக்கு விமானம் ஏர்பஸ் ஏ 380 தனது முதலாவது சேவையை சிட்னிக்கு ஆரம்பித்தது.

### பிறப்புகள்

- 1811 - எவரிஸ்ட் கால்வா, பிரெஞ்சு கணித வியலாளர் (இ. 1832)
- 1881 - பாப்லோ பிக்காசோ, ஸ்பானிய ஓவியர், சிற்பி (இ. 1973)
- 1973 - நசல் பிரேமகுமாரன் ஆர்னோல்ட், இலங்கை துடுப்பாட்ட வீரர்

### இறப்புகள்

- 1400 - ஜெஃப்ப்றி சோசர், ஆங்கில இலக்கிய மேதை. (பி. 1340)
- 1980 - ஸாகிர் லுதியானவி, ஹிந்தி, திரைப்படப் பாடலாசிரியர்.
- 2005 - நிர்மல் வர்மா, ஹிந்தி எழுத்தாளர் (பி. 1929)

**1917 - ரஷ்யாவில் ஒக்டோபர் புரட்சி (பழைய ஜூலியன் நாட்காட்டியின் படி), இடம்பெற்றது. போல் ஷெவிக்குகள் குளிர்கால அரண் மனையைக் கைப்பற்றினர்.**



# 12 ஆம் திகதியில் பிறந்த உங்கள் பலன் எப்படி?

12ஆம் திகதியில் பிறந்தவர்கள் 3ஆம் எண்ணின் ஆதிக்க குணத்தையும் 1, 2ஆம் எண்களின் ஆதிக்கத்தையும் பெற்றவர்களாக இருப்பார்கள். இவர்களில் சிலர் 1, 2ஆம் எண்களின் ஆதிக்கத்தை மட்டும் பெற்றிருப்பார்கள். சிலர் 3ஆம் எண்ணின் ஆதிக்கத் தை மட்டும் பெற்றிருப்பார்கள். இவர்களின் தொழில் அதிபதி எண்கள் 3, 9, தொழில் உதவி எண்கள் 5, 7.

இவர்கள் பெரும்பாலும் இரண்டு விதமான மனப்போக்கை உடையவர் களாகவும்; அதிகமாகப் பாசாங்கு செய்யக் கூடியவர்களாகவும் இருப்பதைக் காணலாம். எதையும் உடனே நிறைவேற்றும் குணம் அதிகம் இருப்பதில்லை. தனக்கென்று வரும்போது மட்டும் அவசரமும் ஆர்ப்பரிப்பும் வெளிப்படும் தன்மை இருக்கும். இந்த எண்ணில் பிறந்தவர்கள் அரசின் செயல் மற்றும் திட்டங்கள் சம்பந்தப்பட்ட துறைகளில் தான் அதிகம் இருப்பார்கள். அரசின் திட்டங்கள் மிகவும் மெதுவாகச் செயற்படுவதற்கு பெரும்பாலும் இவர்களே பொறுப்பாளர்களாக இருப்பதையும் காணலாம். இவர்களின் முன்னேற்றம் என்பது எதிர்பாராமல் கிடைக்கும் நிலையைப் பெற்றுள்ளதால், இவர்கள் அடுத்தவர்களுக்குக் கிடைக்க வேண்டியதைத் தாமதப்படுத்தும் குணம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு தொழில் அதிபதி எண்கள் 3, 9இன் ஆதிக்கம் மிக அதிகமாக இருப்பதால், தொடர் முன்னேற்றமும் வெற்றியும் கிடைக்கப் பெறுகிறார்கள். இவர்களின் தொழில் தொடர்பான மன நிலையைத் தொழில் உதவி எண்களான 5, 7இன் ஆதிக்கம் நிர்ணயிப்பதால், இருநிலை கொண்ட மன நிலையைப் பெறுகிறார்கள். தாங்கள் செய்யும் தவறுகளை மிகவும் நேர்த்தியாக மறைத்து, அடுத்தவர்மேல் பழிசுமத்தும் குணம் உள்ளவர்களாக இருப்பதைக் காணலாம். இவர்கள் வியாழக்கிழமை தோறும் சுவாமிநாத சுவாமிக்கு வெள்ளை நிறப் பூக்களால் அர்ச்சித்து தீப வழிபாடு செய்தால் குழப்பமில்லாத மன நிலையும் தீர்க்கமான முடிவு எடுக்கக் கூடிய நிலையையும் பெற்று மேன்மை அடையலாம்.

இவர்கள் அனைத்து விதத் தொழில்களிலும் இருப்பார்கள். இவர்களின் பிரத்தியேகமான தொழிலாக உணவு மற்றும் அதைச் சார்ந்த தொழில் இருப்பதைக் காணலாம். ஹோட்டல், பேக்கரி மற்றும் உணவு பதனிடுதல் போன்ற தொழில் மூலம் மிக அதிக வருவாய் கிடைக்கப் பெறும் நிலை உடையவர்கள் இவர்களே. இதற்குக் காரணம் பிறந்த திகதி எண்ணுடன் தொழில் அதிபதி எண்களான 3, 9இன் ஆதிக்கம் மிக அதிகமாக இருப்பதே. தொழில் உதவி எண் ஆதிக்கம் மட்டும் சிறப்பாக அமையப் பெற்றவர்கள் மாமிச உணவு சம்பந்தப்பட்ட வகையில் சிறப்பான முன்னேற்றம் காண்பார்கள். தொழில் எண்கள் மற்றும் தொழில் உதவி எண்களின் ஆதிக்கம் நன்றாக அமையப் பெற்றவர்கள், எந்தத் துறை சம்பந்தப்பட்ட தொழிலாக இருந்தாலும் குறுகிய காலத்தில் நல்ல முன்னேற்றம் அடையக் கூடியவர்களாக இருப்பார்கள். எண் ஆதிக்கம் குறைவாக உள்ளவர்கள், "அன்றைக்குப் பார்த்தது அழிவில்லை' என்பதைப் போலவே இருப்பார்கள். பேச்சுவன்மை உடையவர்களாக இருப்பதால் தொழிலில் உள்ள குறைகளை மறைத்துப் பேசி விற்பனை செய்யும் திறமை படைத்தவர்களாகவும் இருப்பார்கள். தன் சுய முன்னேற்றத்திற்கு எதைச் சொல்ல வேண்டும், எதைச் சொல்லக் கூடாது என்பதை நன்கு அறிந்து செயற்படுவார்கள். இவர்கள் வியாழன் தோறும் ஏழைகளுக்கு அன்னதானம், ஆடை தானம் செய்து வந்தால் மேலும் நன்மைகள் பெற்று நலமடையலாம்.

இவர்கள் பெரும்பாலும் பிறருக்குப் பொருள் ஈட்டிக் கொடுக்கப் பிறந்தவர்களாகவே இருக்கிறார்கள். பெரும்பாலும் தாழ்வு மனப்பான்மை அதிகமாகவும், சுய நம்பிக்கை குறைவாகவும் இருப்பதையும் காணலாம். இவர்கள் நல்ல திறமைசாலிகளாக – புத்திக்கூர்மை உள்ளவர்களாக இருந்தும் ஏன் இப்படி இருக்கிறார்கள் என்பதை ஆராய்ந்த போது, இவர்களின் தொழில் உதவி எண்களான 5, 7இன் ஆதிக்கம் விட்டு விட்டுச் செயற்படுவதை அறிய முடிந்தது. இவற்றில் ஏதேனும் ஒரு எண்ணின் ஆதிக்கம் கிடைத்துவிட்டால் தொழில் நிலையில் மாற்றம் ஏற்பட்டு, சிறிய அளவிலாவது சுயமாகத் தொழில் செய்யும் அமைப்பைப் பெற்று விடுவார்கள். எண்களின் ஆதிக்கம் குறைவாக இருக்கும்போது பொதுநலவாதியாகவும், எண் ஆதிக்கம் கிடைத்து சுயதொழில் செய்யும் போது சுயநலவாதியாகவும் மாறி விடுவார்கள். இவ்வெண்ணில் பிறந்த பெரும்பாலானவர்களுக்கு குடும்பச் சூழ்நிலையும் பொருளாதார நிலையும்தான் இவர்களின் இந்த நிலைக்குக் காரணமாகிறது. இவர்கள் புதன்கிழமை தோறும் இராகு காலத்தில் சிவசக்தியை தீபம் ஏற்றி வழிபட்டு வந்தால் நன்மைகளும் மேன்மைகளும் கிடைக்கப் பெறலாம்.

மனம்போல் வாழ்வு என்பதற்கு ஏற்ப, தேவைப்படும்போது தொழில் செய்யும் எண்ணமும், வேண்டாம் என்று நினைத்தபோது வெளியூர் சென்று ஓய்வெடுக்கும் குணமும் இவர்களிடம் இருப்பதைக் காணலாம். இவர்கள் 1, 2ஆம் எண்களின் கலப்பு குணத்தை அதிகம் பெற்றிருப்பதையும் காணலாம். 3ஆம் எண்ணின் ஆதிக்கம் குறைவாக இருந்தாலும், 1, 2ஆம் எண்களின் ஆதிக்கம் மட்டுமே இவர்களை வழிநடத்திச சென்றுவிடும். அதிகமான இரகசியங்கள் மனதில் குடிகொண்டிருக்கும். எதையும் எளிதில் வெளிக்காட்டிக் கொள்ளாமலும், மற்றொருவரிடம் பகிர்ந்து கொள்ளாமலும் மனதிலேயே வைத்துக் காரியமாற்றக் கூடியவர்கள் இவர்களே. எதையும் மறைக்காமல் செயற் படக் கூடியவர்களுக்கு முன்னேற்றத் தடை ஏற்படும் என்பதை அறிக. மேலும் எண் ஆதிக் கம் குறைவாக இருப்பவர்கள், மனதில் எந்த இரகசியமும் இன்றி வெளிப்படையாகச் செயற்படுவார்கள். கலைத் துறையினருக்கு எப்படியும் தொழில் எண்ணும் தொழில் உதவி எண்ணும் மாறி மாறி உதவிகள் செய்வதால், கடைசி வரை கலை சம்பந்தப்பட்ட துறையிலேயே காலத்தை ஓட்டும் நிலையும், பொருளாதார நிலை ஒரே மாதிரியாகவும் அமைந்து விடும். இவர்கள் வெள்ளிக்கிழமை தோறும் மகாலட்சுமிக்கும் சரஸ்வதிக்கும் தீபம் ஏற்றி வழிபாடு செய்து வந்தால் நன்மைகளும் மன அமைதியும் பெறலாம்.

பிறந்தது திகதி 12, விதி எண் 1ஆக இருப்பவர்களுக்கு 4 ஆண்டுகள் அல்லது 6 ஆண்டுகள் நற்பலனும்; 1 அல்லது 3 ஆண்டுகள் சுமாரான பலனுமாக 27 ஆண்டுகள் பலன்கள் உண்டாகும். பிறந்த திகதி 12, விதி எண் 2ஆக இருப்பவர்கள் தொடர்ந்து 12 ஆண்டுகள் மிக அதிகமான நற்பலனும்; 6 ஆண்டுகள் மிதமான பலனும் மாறி மாறிக் கிடைக்கப் பெறுவர். பிறந்த திகதி 12, விதி எண் 3ஆக இருப்பவர்கள் 30 ஆண்டுகள் நற்பலன் கிடைக்கப் பெறுவர். பிறந்த திகதி 12, விதி எண் 4ஆக இருப்பவர்கள் 24 ஆண்டுகள் நற்பலன் கிடைக்கப் பெறுவர். பிறந்த திகதி 12, விதி எண் 5ஆக உள்ளவர்கள் 14 ஆண்டுகள் தொடர்ந்து நற்பலனும்; பின் 3 ஆண்டுகள் இடைவெளிவிட்டு 5 அல்லது 7 ஆண்டுகள் நற்பலனைத் தரும். பிறந்த திகதி 12, விதி எண் 6ஆக இருப்பவர்களுக்கு இடையூறு இல்லாத மேன்மையைச் செய்து கொண்டே இருக்கும். (முன்னேற்றம் வரும் வரை முயற்சிகள் செய்து கொண்டே இருக்க வேண்டும்). பிறந்த திகதி 12, விதி எண் 7ஆக இருப்பவர்களுக்கு 22 ஆண்டுகள் நற்பலனைத் தரும். பிறந்த திகதி 12, விதி எண் 8ஆக உள்ளவர்களுக்கு 19 முதல் 24 ஆண்டுகள் வரை நற்பலனைத் தரும். பிறந்த திகதி 12, விதி எண் 9ஆக உள்ளவர்களுக்கு 27 ஆண்டுகளும் நற்பலனைத் தரும்.

குறிப்பு :- பிறந்த திகதி எண், விதி எண், தொழில் எண், நன்மை செய்யும் எண் ஆகியவற்றின் ஆதிக்கத்தைப் பொறுத்து தொழில் நிலைகள் மாறுபடும். (தொடரும்)

**எஸ்.என்.ஹிரிஜி**

# முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கை

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள் குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் பெரும்போக நெற்செய்கையை ஆரம்பித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மேற்குப் பகுதியிலுள்ள பாண்டியன்குளம், துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுகளிலும் கிழக்குப் பகுதியிலுள்ள ஒட்டுசுட்டான் மற்றும் முல்லைத்தீவு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள இடங்களில் நெற் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவுகளிலுள்ள காணிகளில் எண்பது வீதத்துக்கும் அதிகமானவை பயிர்ச் செய்கைக் குட்படுத்தப்பட்டுள்ளதாக முல்லைத் தீவு மாவட்டத்திலுள்ள கமநலசேவைகள் நிலைய அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். கடந்த காலங்களை விடவும் இந்தத் தடவை அதிகளவானோர் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். என்றும் இவர்களுக்கான உழவு மற்றும் விதை நெல் ஆகியவற்றை தாம் வழங்கி வருவதால் நெற்செய்கையில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை அதிகமாயிருப்பதாகவும் இந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் நெற்செய்கை நடைபெறவில்லை. அந்தப் பிரிவில் மக்களின் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் நடைபெறாத காரணத்தினால் பயிர்ச் செய்கையும் நடைபெற வில்லை எனவும் அந்த அதிகாரி மேலும் தெரி வித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இடம்பெயர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஜேர்மன் அரசு நிதியுதவி

(கொழும்பு)

இடம்பெயர்ந்த மக்களுக்கான வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான வேலைத்திட்டத்திற்காக ஜேர்மனிய அரசாங்கம் நிதி உதவி வழங்க முன்வந்துள்ளது.

இதற்காக 30 இலட்சம் ரூபா நிதியை வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தினால் விதவைகளாக்கப்பட்டோர் மற்றும் இளைஞர்களுக்காக இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளன.

இந்த நிதியைக் கொண்டு அவர்களுக்கு சுயதொழில் மற்றும் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அத்துடன் இளைஞர்களுக்கான தொழில் சார் கற்கை நெறிகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

இலங்கையின் வர்த்தக சம்மேளனத்தின் துணையுடன் இந்த நிதி பயபடுத்தப்படவுள்ளது. (ஸ்ரீ-2)

# தெற்காசியாவில் போதைப்பொருள் கடத்தல்களை தடுக்க இலங்கை -இந்தியா கூட்டுத்திட்டம்

தெற்காசிய வலயத்தில் போதைப் பொருள் கடத்தல்களை ஒழிப்பதற்கு இலங்கை இந்திய பாதுகாப்பு வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வலயத்தில் போதைப் பொருள் பாவனையை ஒழிப்பது தொடர்பான வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவேண்டும் என இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஆலோசித்துள்ளார்.

அண்மையில் புதுடில்லியில் இரு நாட்டு அரசு தலைவர்களுக்கிடையில் இடம்பெற்ற சந்திப்பின் போது தெற்காசிய வலயத்தில் பாதுகாப்பு தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. குறிப்பாக போதைப் பொருள் தொடர்பான விடயத்தைப் பற்றி அதிக அக்கறை காட்டப்பட்டது. இந்த போதைப்பொருள் கடத்தல்களினால் நாட்டின் பாதுகாப்புக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பில் அவதானத்துடன் இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது..

தீவிரவாதம், போதைப்பொருள் கடத்தல் போன்றவற்றுக்கிடையிலுள்ள தொடர்புகளை அவதானத்துக்கு எடுத்துக்கொண்ட இரு நாட்டு தலைவர்களும் தெற்காசிய வலயத்தில் சிறந்த நட்புறவினை கட்டி எழுப்ப பாதுகாப்பு வேலைத்திட்டம் ஒன்றை கூட்டாக மேற்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இந்த ஒன்றுபட்ட வேலைத்திட்டத்தின் கீழ் போதைப் பொருள் கடத்தல் தொடர்பான தகவல்களைப் பகிர்ந்து கொள்ளல் புதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளிட்ட செயற்றிட்டங்களை எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# சிறைச்சாலை அதிகாரிகள் இடமாற்றப்படவுள்ளனர்

இவ்வாண்டின் இறுதிக்குள் பெரும்பான்மையான சிறைச்சாலைகளில் கடமையாற்றி வரும் பல உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படும் என சிறைச்சாலை வீ.ஆர்.டி. சில்வா தெரிவித்துள்ளார். இவ்வாறு இடமாற்றம் செய்யப்படும் உத்தியோகத்தர்களில் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. சில சிறைச்சாலைகளில் காணப்படும் பல்வேறு ஊழல் மோசடிகளினால் இடமாற்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. பல்வேறு காரணங்களைக் காட்டி ஒரே சிறைச்சாலையில் தொடர்ந்தும் கடமையாற்றுவதற்கு சில சிறைசாலை அதிகாரிகள் முயற்சித்து வருவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. வெலிக்கடைச் சிறைச்சாலையைத் தவிர்ந்த ஏனைய சிறைச்சாலைகளிலும் சிறு ஊழல் மோசடிகள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ)

# காங்கிரஸை விமர்சிக்கிறார் திருமா. தகுதியை கேட்கிறார் கார்த்திக்!

## நியாயம் கேட்க இலங்கைக்கு சென்றவர் மகிந்தவின் உணவில் மயங்கியது எதற்கு?



இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ராஜமரியாதை தரும் காங்கிரஸ் கட்சியை கூட்டணியிலிருந்து தி.மு.க. கழற்றி விடத் தயங்கக் கூடாது என்று விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் கொளுத்திப் போட்ட குண்டு காங்கிரஸ் தலைவர்களை கொதிப்படைய வைத்திருக்கிறது.

இதனால், "காங்கிரஸை விமர்சிக்க திருமாவளவனுக்கு தகுதி இல்லை" என்று பொது மேடையில் ஆவேசம் காட்டியிருக்கிறார் மத்திய அமைச்சர் ப.சிதம்பரத்தின் மகனும் அகில இந்திய காங்கிரஸ்கமிட்டி உறுப்பினருமான கார்த்திக்சிதம்பரம். அவரை நாம் தொடர்பு கொண்டு பேசியபோது, "தி.மு.க. காங் கிரஸின் கூட்டணியில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு ஜெயித்தார் திருமாவளன். காங்கிரஸின் தயவில்லாமல், ஆதரவில்லாமல் ஜெயித்திருக்க முடியாது. காங்கிரஸின் ஆதரவால் ஜெயித்து விட்டு காங்கிரஸை விமர்சிக்க அவருக்கு என்ன தகுதி இருக்கிறது? துணிச்சல் இருந்தால் காங்கிரஸால் வெற்றி பெற்ற எம்.பி.பதவியை இராஜினாமா செய்துவிட்டு... காங்கிரஸை விமர்சித்திருக்க வேண்டும். இப்போதும் கெட்டு விடவில்லை... பதவியை இராஜினாமா செய்யும் துணிச்சல் திருமாவளவனுக்கு இருக்கிறதா? காங்கிரஸை வேண்டாம் என்பவர், காங்கிரஸால் கிடைத்த எம்.பி.பதவியில் ஏன் ஒட்டிக்கொண்டிருக்க வேண்டும்?

இந்தியா வந்த ராஜபக்ஷவிற்கு பிரதமர் விருந்து கொடுத்ததை கண்டிக்கும் திருமாவளவன், ஈழ மக்களின் துயரங்களை அறிய இலங்கை சென்றாரே! அப்போது ராஜபக்ஷ கொடுத்த விருந்து சாப்பாட்டை நன்றாக ருசித்து சாப்பிட்டு விட்டு கொடுத்த பரிசுப்பொருளையும் வாங்கிக்கொண்டு வந்தாரே எதற்காக? அவரைக் சந்திக்க நான் விரும்பவில்லை என்று கூறி ஹோட்டலிலேயே இருந்திருக்க வேண்டியது தானே!

சரி...அதைத்தான் செய்யவில்லை ஜனாதிபதி ராஜபக்ஷவை சந்தித்த போதாவது ஈழ மக்களுக்காக அவர் சட்டையைப்பிடித்து திருமாவளவன் நியாயம் கேட்டிருக்கலாமே! ஏன் கேட்கவில்லை? அட்லீஸ்ட்...ஈழ படுகொலைக்கு நீங்கள் தான் காரணம் என்றாவது சுட்டிக் காட்டினாரா? இல்லை கிடைத்த வாய்ப்பையெல்லாம் விட்டு விட்டு, இங்கு உட்கார்ந்து கொண்டு வீராவேசம் காட்டுவது யாரை ஏமாற்றுவதற்காக.

ராஜபக்ஷவுக்கு மரியாதை தருவதால் காங்கிரஸை தி.மு.க.கூட்டணியில் இருந்து விலக்க வேண்டுமென்று கலைஞருக்கு யோசனை சொல்லும் திருமாவளவன்; அதே காரணத்தை சுட்டிக் காட்டி மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தி.மு.க. அமைச்சர்களை திரும்பப் பெறுங்கள் என்றும் கலைஞருக்கு யோசனை சொல்வாரா?

காங்கிரஸ் பற்றிய திருமாவளவனின் விமர்சனங்களை சோனியா காந்திக்கு அனுப்பியிருக்கிறோம். வரும் தேர்தலில் தி.மு.க காங்கிரஸ் கூட்டணியில் திருமாவளவன் நீடிக்கும் பட்சத்தில் அவரை கூட்டணியில் இருந்து விலக்க கலைஞரிடம் வலியுறுத்துமாறு சோனியாவிடம் நாங்கள் முறையிடுவோம்! என்கிறார் ஆவேசமாக கார்த்திக் சிதம்பரம்.

### காங்கிரஸை விமர்சிக்க எனக்கு உரிமையுண்டு

கார்த்திக் சிதம்பரத்தின் கடுமையான விமர்சனங்கள் குறித்து திருமாவளவனிடம் நாம் பேசிய போது,"மரகதம், சந்திரசேகர், பரமேஸ்வரன், இளைய பெருமாள் உள்ளிட்ட எனது முப்பாட்டன்களின் கடுமையான உழைப்பால் வளர்ந்த கட்சிதான் காங்கிரஸ். அதனால், காங்கிரஸை விமர்சிக்க எனக்கு முழு உரிமை உண்டு. ஆக, எனக்கு தகுதி இல்லை என்று சொல்வதெல்லாம் வரலாற்று பின்னணிகளை அறியாதவர்களின் உளறல்தான்.

எனது வெற்றியில் காங்கிரஸின் பங்கும் இருக்கிறது. உண்மைதான் ஒப்புக் கொள்கிறேன். எனக்காக ஜி.கே.வாசன் அமரமூர்த்தி கே.எஸ். அழகிரி.

காங்கிரஸ் கட்சிக்கு வாக்குச் சாவடி முகவர்களாக பெரும்பாலும் சிறுத்தைகள் தான் இருந்தோம். காங்கிரஸுக்காக தி.மு.க.செலவு செய்தது சிறுத்தைகள் உழைத்தனர். இதை யாரும் மறுக்க முடியுமா? ஆக,தி.மு.க. சிறுத்தைகள் இல்லையென்றால் காங்கிரஸ் வெற்றி பெற்றிருக்க முடியுமா?

நாங்கள் ஒரு இடம்தான் வெற்றி பெற்றோம். அவர்கள் வெற்றி பெற்றது ஒன்பது இடங்கள். அவர்களின் வெற்றியில் விடுதலை சிறுத்தைகளின் உழைப்பும் வாக்குகளும் உண்டா? இல்லையா? இதற்கு காங்கிரஸ் தலைவர்கள் பதில் சொல்லட்டும். நான் பதவியை இராஜினாமா செய்கிறேன்.

பதவிக்கு ஆசைப்படுவனோ, சொல்வதெல்லாம் வரலாற்று பின்னணிகளை அறியாதவர்களின் உளறல் தான்.

எனது வெற்றியில் காங்கிரஸின் பங்கும் இருக்கிறது. உண்மைதான் ஒப்புக்கொள்கிறேன். எனக்காக ஜி.கே. வாசன்,அமரமூர்த்தி,கே.எஸ். அழகிரி போன்றவர்கள் பிரசாரம் செய்தனர். அவர்களுக்காக நன்றி சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். நாடாளுமன்றத் தேர்தலில் நாங்கள் போட்டியிட்டது. இரண்டு இடம்.இந்த இரண்டில் மட்டும்தான் காங்கிரஸின் ஆதரவு. ஆனால், காங்கிரஸ் போட்டியிட்டது 15 தொகுதிகள். அதில் வெற்றி பெற்றது 9. இந்த 15 தொகுதிகளிலும் விடுதலைச் சிறுத்தைகள் கடுமையாக உழைத்தனர்.

காங்கிரஸ் கட்சிக்கு வாக்குச் சாவடி முகவர்களாக பெரும்பாலும் சிறுத்தைகள் தான் இருந்தோம். காங்கிரஸுக்காக தி.மு.க.செலவு செய்தது சிறுத்தைகள் உழைத்தனர். இதை யாரும் மறுக்க முடியுமா? ஆக, தி.மு.க. சிறுத்தைகள் இல்லையென்றால் காங்கிரஸ் வெற்றி பெற்றிருக்க முடியுமா?

நாங்கள் ஒரு இடம்தான் வெற்றி பெற்றோம். அவர்கள் வெற்றி பெற்றது ஒன்பது இடங்கள். அவர்களின் வெற்றியில் விடுதலை சிறுத்தைகளின் உழைப்பும் வாக்குகளும் உண்டா? இல்லையா? இதற்கு காங்கிரஸ் தலைவர்கள் பதில் சொல்லட்டும். நான் பதவியை இராஜினாமா செய்கிறேன்.

பதவிக்கு ஆசைப்படுவனோ, அதில் ஒட்டிக் கொண்டிருக்கவோ விருப்பப் படாதவன் நான். கலைஞர் மீது ஏற்பட்ட சின்ன வருத்தத்தால் எம்.எல்.ஏ.பதவியை இராஜினாமா செய்தவன் நான்.

இலங்கைக்கு நான் சென்றது ஈழ மக்களின் துயரங்களை அறிந்து வரத் தான். ஜனாதிபதியிடம் சண்டை போடுவதற்கு அல்ல! அந்த நபரை நான் சந்தித்தது கூட ஈழப் பிரச்சினையில் அவரின் நிலைப்பாடு என்ன என்பதை அறிந்து கொள்ளத்தான். இலங்கைக்கு ஒரு குழுவாக நாங்கள் போயிருக்கிறோம். அதற்கு டி.ஆர்.பாலுதான் தலைவர். அவரது ஒப்புதல் இல்லாமல் நான் ஏதேனும் பேசி... குழுவுக்கு ஒரு அநாகரிகத்தை ஏற்படுத்தி விடக்கூடாது என்பதால் நாகரிகமாக நடந்து கொண்டேனே தவிர...





அச்சத்தால் அல்ல.

எங்களுக்கு தங்குவதற்கு இடம், சாப்பாடு உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் ஏற்பாடு செய்தது ஆறுமுகத் தொண்டைமான்தான். ராஜபக்ஷ சகோதரர்கள் தந்த எதையும் நான் சாப்பிடவில்லை. ராஜபக்ஷ ஏதோ ஒரு பெரிய பரிசு பொருட்களை தந்ததாக செய்தி பரப்புகிறார்கள். அப்படி யாருக்கும் எதுவும் தரவில்லை. தேநீர் கொடுத்தார்கள். அதனை நான் மட்டும் அல்ல காங்கிரஸ்காரர்கள் கூட சாப்பிடவில்லை. ஆனால் வெளிவிவகாரத்துறை அமைச்சர்தான் எல்லோருக்கும் ஒரு சின்ன பார்சலை தந்தார். அதை நான் வாங்காமல் வெளியேறினேன். அப்போது அமைச்சரின் உதவியாளர் இது வெறும் டீத்தூள்தான் சார் என்று கூறி கொடுத்தார். இது தான் நடந்தது. ஆனால் ஏதோ பெரிய பரிசு கொடுத்ததாக அபாண்டமாக அவதூறு பரப்புகின்றனர் என்று பதிலடி தருகிறார் திருமாவளவன்.

**நக்கீரன்**

## நான்கு கோரிக்கைகளை முன் வைத்து தாதிய உத்தியோகத்தர்கள் இன்று பணிப்பகிஷ்கரிப்பு

நான்கு கோரிக்கைகளை முன் வைத்து தாதிய உத்தியோகத்தர்களின் பணிப்பகிஷ்கரிப்பு நடவடிக்கையொன்று இன்று திங்கட் கிழமை நாடு தழுவிய ரீதியில் இடம்பெறவுள்ளதாக அரச தாதிய உத்தியோகத்தர் சங்கத்தின் உப தலைவரும் சங்கத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளருமான பி.எம்.நசுர்தீன் தெரிவித்துள்ளார்.

அரச தாதிய உத்தியோக்தர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 8 மணிமுதல் 11 மணிவரை இந்த வேலைபகிஷ்கரிப்பு இடம் பெறவுள்ளது. தாதியர்கள் 12 வருட சேவைக் காலத்தில் முதலாம் தரத்தைப் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்தல் வேண்டும். வேலை நாட்கள் 6ஆக இருப்பதை 5 ஆக குறைத்தல் வேண்டு மென்றும் தாதியர்களின் மேலதிக சம்பளத்தை 240 ஆல் பிரிப்பதை நிறுத்தி 180 ஆல் பிரிக்க வேண்டும் தாதியர் யாப்புத் திருத்தத்தை உடனடியாக வெளியிட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன் வைத்து தாதியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளனர். இன்று நடத்தப்படும் தமது ப்கிஷ்கரிப்பு நடவடிக்கைக்குப் பின்னரும் அரசிடமிருந்து சாதகமான பதில்கள் தமக்குக் கிடைக்காது விடின் எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி நாடு தழுவிய ரீதியில் சுகயீனப் போராட்டமென்றை மேற்கொள்வதற்கு தமது சங்கம் தீர்மானித்துள்ளதாகவும் சங்கத்தின் உபதலைவர் நசுர்தீன் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## எரிபொருட்களின் விலை குறைக்கப்படவுள்ளது.

(கொழும்பு)

பெற்றோலியம் உற்பத்தி செய்யும் நாடுகளிலிருந்து நேரடியாக எரிபொருள்களை கெர்ள்வனவு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் எரிபொருள்களின் விலையை இன்னும் சில மாதங்களில் குறைக்கவுள்ளதாக பெற்றோலியவளத்துறை அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

இல்ங்கை தற்போது சிங்கப்பூரிலிருந்து எரிபொருள்களைக் கொள்வனவு செய்து வருவதாகவும் ஊடகங்களுக்கு அவர் கூறினார். (ஸ்ரீ-2)

# கவர்ந்திழுக்கும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள்

கவர்ந்திழுக்கும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் ஒரு மேற்கத்திய நாட்டின் நூலகத்தில், புத்தகங்களிலும், லப்டொப்புக்களிலும் தங்களின் கவனத்தை பதித்து அமர்ந்தீருக்கும் பல்வேறு நாட்டின் முகங்களை பார்கையில் உலகமயமாக்கலின் விளைவுகளைப் புரிந்துகொள்ளலாம்.

2009ஆம் ஆண்டு யுனெஸ்கோ மதிப்பீட்டின்படி, உயர் கல்விக்காக தங்கள் நாட்டை விட்டு வெளிநாடுகளில் சென்று படிப்பவர்களின் எண்ணிக்கை 2.8 மில்லியன் என்ற அளவில் உள்ளது. இந்த எண்ணிக்கை 2020 ஆம் ஆண்டில் 8 மில்லியனாக உயரும் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதுபோன்று பல்வேறு நாட்டு பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் சென்று பயில்வதன் மூலமாக, உலகளாவிய அறிவுச் சுழற்சி ஏற்பட்டு பல நாடுகளுக்கும் நன்மை ஏற்படுகிறது.

தங்களின் தாய்நாட்டையும் உறவினர்களையும் விட்டு, முன்பின் பார்த்திராத ஏதோ ஒரு நாட்டிற்கு செல்ல இவர்களை தூண்டுவது எது? மேலும் பெற்றோர்களும் மாணவர்களும் தங்களின் திறமைக்கு சவாலாக இருக்கக் கூடிய வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தை எப்படித் தேர்ந்தெடுக்கிறார்கள் மற்றும் அந்த முடிவு ஒரு மாணவனின் வாழ்க்கையை சிறப்பாக கட்டமைக்கிறது என்று எப்படி அவர்கள் நம்புகிறார்கள்?

இதற்கு, மற்ற புலம்பெயர்பவர்களைப் போலவே, மாணவர்கள் வெளிநாடு



செல்வதற்கான காரணங்களில், சிறப்பான வாழ்க்கை வளத்திற்கான தேடலும் முக்கியமானது.

மேலும் வெளிநாட்டுப்பல்கலைக் கழகத்தில் பட்டம் வாங்கினால் நல்ல வேலை கிடைக்கும் என்று மாணவர்கள் நம்புகிறார்கள். இதைத்தவிர ஆங்கில மொழியில் நன்கு புலமை பெறுவதும் முக்கிய அம்சமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. சர்வதேச வணிகம், மீடியா மற்றும் கல்வித்துறையில் ஆங்கில ஆதிக்கம் இருப்பதே இதற்குக் காரணம்.

ஆனால் இத்தகைய காரணங்கள் தவிர்த்து வேறு சில முக்கிய பயன் விளைவுகளும் மாணவர்கள் வெளிநாடு சென்று படிப்பதில் இருக்கின்றன. முன்பின் பார்த்திராத ஒரு புதிய இடத்தில் சென்று வருடக்கணக்கில் படிப்பதானது, மாணவர்களின் தன்னம்பிக்கையை வளர்த்து, வாழ்க்கையை பற்றிய ஒரு பரந்த அளவிலான புரிதலை பெறச் செய்து, வேறுபாடுகளை எதிர்கொள்ள உதவுகிறது.

அதேசமயம் வெளிநாட்டில் வாழத் தொடங்குவதிலும் சில படிநிலைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. உதாரணமாக, நீங்கள் பிரிட்டனில் படித்து அங்கேயே வாழ விரும்பினால், அங்குள்ள வாழ்க்கை முறைகளைப் பழக வேண்டும்.

அங்குள்ள பலதரப்பட்ட கலாசார பின்னணி கொண்ட நகரங்களின் சூழல்களைப் பழகுதல், அங்குள்ள உணவு முறைகளைப் பழகுதல் போன்றவற்றை நிறைவு செய்த பின்னரே அங்கு வாழ்வதைப் பற்றி ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கமுடியும். இல்லை யெனில் நல்ல தகுதியுடன் தாய்நாடு திரும்பி இங்கே சிறப்பான வாழ்க்கையை ஆரம்பிக் கலாம்.

தாங்கள் ஏதோவொரு விதத்தில் தேர்ந்தெடுக்கும் ஒரு வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் சிறப்பான கல்வியை தந்து, பட்டம் வழங்கி அதன்மூலம் சமூகத்தில் நல்ல அந்தஸ்து கிடைக்கும் என்று எப்படி பெற்றோர்களும் மாணவர்களும் முடிவு செய்கிறார்கள்?

எனவே பொதுவாக அவர்கள், வெளிநாட்டு மாணவர்கள் கொண்டுவரும் பணத்திலேயே குறிப்பாக இருந்து, தரமற்ற கல்வியை வழங்கும் சில பல்கலைக் கழகங்கள் விடயத்தில் கவனமாக இருக்க வேண்டும்.

“ வெளிநாட்டுக் கல்விக்காக போதிய பணத்தை மாணவர்கள் செலவிடத் தயாராக இருந்தால், அவர்கள் விரும்பும் கல்வியை விரும்பும் வகையில் பெற முடியும். இது சர்வதேச பல்கலைக்கழகங்களுக்கு மத்தியில் போட்டியை உருவாக்கி, மாணவர்களை கவர்ந்திழுக்கும் என்பதில் ஐயமில்லை” என்று கல்வியாளர்கள் உறுதிபடக் கூறுகின்றனர்.

## வெளிநாட்டு மொழியை கற்பது எளிதா?

தாய்மொழி கற்பது எல்லோருக்கும் எளிதாக இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? நாம் பிறந்ததில் இருந்தே பெற்றோர், உறவினர்கள் பேசுவதை காதால் கேட்கின்றோம். உச்சரிப்புக்கள், வாய் அசைவுகள் தானாகவே மூளையில் பதிந்து விடுகின்றன. உரையாடல் மொழியை பெற்றோர்களிடம் இருந்தே கற்றுக்கொள்கின்றோம். ஆரம்பப் பாடசாலையில் ஆசிரியரிடம், நாம் ஏற்கனவே அறிந் துள்ள உரையாடல் மொழிக்கான எழுத்து வடிவங்களை, இலக்கணங்களை கற்கின் றோம். இதனால் எளிதாக தாய்மொழி கற்கமுடிகின்றது.



இதற்கு மாறாக, வீட்டில் , சுற்றுப்புறத்தில் பேசாத ஒரு மொழியை திடீரென கற்க ஆரம்பிக்கும்போது, வித்தியாசமான உச்சரிப்புக்கள், இலக்கணம், அந்த மொழிக்கே உரித்தான தனித்தன்மைகளை கற்க வேண்டியுள்ளது.

இதனால் சிறிது தடுமாற்றம் ஏற்படுகின்றது. சிறுவயதில் இருந்தே பல மொழிகளைக் கேட்கும் வாய்ப்பு உள்ள வர்களுக்கும், வீட்டில் பே சும் மொழி ஒன்றாகவும், பயிலும் மொழி வேறாகவும் இருப்பவர்களுக்கு புதிய மொழி கற்க ஆரம்பிக்கும்போது தடுமாற்றம் சிறிதுகுறைந்து காணப்படும். அவர்கள் எளிதில் புரிந்து கொள்வார்கள். இதற்குக் காரணம். அவர்கள் ஏற்கனவே ஒன்றுக்கும் மேற்பட்ட உச்சரிப் புக்களை காதால் கேட்கும் வாய்ப்பு பெற்றி ருப்பதே. இதனால் புதிய உச்சரிப்புக்களை விரைவாக உள் வாங்கிக் கொள்ள முடிகிறது. வீட்டில் பேசும் மொழியும் ஆரம்பப் பாடசாலையில் கற்கும் மொழியும் ஒன்றாக இருப்பவர்கள், வேறு மொழியைக் கற்பதில் சிறிது சிரமப்படுவார் கள். ஏனெனில் இவர்களுக்கு வித்தியாச மான ஓசைகளை உணர்வதற்கு ஆரம்பத்தில் தடுமாற்றம் ஏற்படும். (தொடரும்)

## பொது அறிவு

- வில்லியம் விக்ரி 1996ஆம் ஆண்டு எந்தத் துறையில் நோபல் பரிசு பெற்றார்?
  பொருளியல்
- ஊழலை ஒழிக்க இந்தியாவுக்கு உதவும் அமைப்பு எது?
  இன்டர்போல்
- கடல் நீரில் உள்ள உப்பின் சதவீதம் எவ்வளவு?
  32%
- பூகம்பம் அடிக்கடி ஏற்படக்கூடிய பகுதி எது?
  தக்கணபீடபூமி
- இறப்பர் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?
  மலேசியா
- மக்கள் நெருக்கம் மிகுந்த நாடு எது?
  பங்களாதேஷ்
- அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்தை எழுதியவர் யார்?
  வோஷிங்டன்
- ரஷ்யப் புரட்சியின் தந்தை என்று அழைக்கப்படுவர் யார்?
  லெனின்

ஹாலி வால் நட்சத்திரம் எந்த ஆண்டுக்கு பின் தெரியும்?
2064

## அறிவுக் கலசம்

வலம்புரி

ஆர்.யூ.பாலமுருகன்

## டால்ஸ்டாயின் கேள்வி!

ஒருநாள் காலைநேரம் சிந்தனையாளர் டால்ஸ்டாய் நடந்துபோய்க் கொண்டிருந்தார். எதிரே ஒரு இளைஞன் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தான். உடனே அவர் சென்று அவனைத் தடுத்து நிறுத்தினார்.

“ எதற்காக இப்படிச் செய்கிறாய்?” என்று கேட்டார் டால்ஸ்டாய்.

“ ஐயா... நான் ஏதாவது தொழில் செய்து பிழைக்கத்தான் ஆசைப்படுகிறேன்: ஆனால் அதற்கு மூலதனமாக என்னிடம் எதுவும் இல்லையே? வறுமை வாட்டுகிறது. தற்கொலை செய்து கொள்வது தவிர எனக்கு வேறு வழி தெரியவில்லை” என்றான் அந்த இளைஞன்.

உடனே டால்ஸ்டாய், “நான் உனக்கு நூறு ரூபிள் தருகிறேன். (‘ரூபிள்’ ரஷ்ய நாட்டுப் பணத்தின் பெயர் ) அதற்குப் பதிலாக உனது ஒரு விரலை மட்டும் தருவாயா?” என்றார் டால்ஸ்டாய்.

“ ஒரு விரலா! அது முடியாது”

“ சரி, நூறு ரூபிள் தருகிறேன்... ஒரு கண்ணைத் தருவாயா?”

“ ஒரு கண்ணா! இதுவும் முடியாது”

“ அப்படியென்றால் ஆயிரம் ரூபிள் தருகிறேன். இரண்டு கால்களில் ஒன்றை மட்டுமாவது கொடு.

இளைஞன் கோபத்தோடு சட்டென்று சொன்னான். “ எதுவும் என்னால் கொடுக்க முடியாது. உங்களுக்கு என்ன பைத்தியமா?” என்று சொல்லிக்கொண்டே நகர்ந்தான்.



அப்போது டால்ஸ்டாய் சிரித்துக் கொண்டே, “ தம்பி... இங்கே வா. உன்னிடம் விலை மதிக்க முடியாத உடல் உறுப்புகள் இருக்கின்றன என்பதை இப்போது நீ புரிந்து கொண்டாயா? இது தான் மூலதனம் .இதை நன்றாகப் பராமரித்துப் பயன்படுத்து. நீ விரைவிலேயே செல்வந்தனாவாய்” என்றார்.

அப்பொழுதுதான். அந்த இளைஞன் தனது உடம்பின் மதிப்பை உணர்ந்தான். கல்வியின் நோக்கமே உடல், மனம், மூளை, ஆன்மா ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை நோக்கிச் செல்வதே. எனவேதான் உடற்பயிற்சி நமது கல்வி முறையில் ஓர் அங்கமாக இருக்கிறது.

ஏர் நடக்குமெனில் இயலிசை நாடகம் நடக்கும்
பார் நடக்கும் பசி நடக்கமாட்டாதே.

*– கம்பர்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## எங்கள் வேலையற்ற பட்டதாரிகளை 'விவசாய' தொழிலதிபர்களாக ஆக்குங்கள்

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் பிரதேசங்களில் அபிவிருத்தியை ஏற்படுத்துவது தொடர்பில் ஆக்கபூர்வமாக திட்டங்கள் எதுவும் இல்லை. போருக்குப் பின்பான அபிவிருத்தி என்று கூறிக் கொண்டாலும் அபிவிருத்தி நடவடிக்கை என்றால் என்ன என்பதற்கு சரியான விளக்கம் தெரியாதவாறே நடைமுறை விடயங்கள் அமைந்துள்ளன.

"அபிவிருத்தி" என்ற எண்ணக்கரு பன்மைத்துவம் வாய்ந்தது. இதன் பாதையில் வீறு நடைபோட வேண்டுமாயின் இளம் சமூகத்தை உழைப்பாளிகளாக மாற்றவேண்டும்.

ஒரு நாட்டின்– பிராந்தியத்தின் அபிவிருத்தி என்பது இளம் சமூகத்தின் உழைப்பில் தங்கி உள்ளது.

அதிலும் உணவு உற்பத்திப் பொருட்களின் விளைவிலேயே அந்தப் பிராந்தியத்தின் அபிவிருத்தி தீர்மானிக்கப்படும்.

இந்த வகையில் எமது மண்ணை ஒரு கணம் நோக்கினால் விவசாய விளை நிலங்கள் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன. இதற்கு அப்பால் உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள விளை நிலங்கள் காடாகி மேடாகி பாழாகிப் போயுள்ளன.

இதற்கு மேலாக, விவசாயச் செய்கையில் ஈடுபடுவதற்கு எங்கள் இளம் சமூகம் தயாரா என்ற கேள்விக்கு மௌனத்தைத் தவிர வேறு எதனையும் பதிலாகப் பெற முடியாது.

ஆக, தற்போது எங்கள் விவசாயமானது முதியவர்களின், இயலாமைக்குள் உயிர் தப்பித்துக் கொண்டிருக்கும் ஒரு துறையாக மட்டுமே இருப்பதை உணரலாம்.

இத்துரதிர்ஷ்ட நிலையைப் போக்க துரித நடவடிக்கை எடுப்பது கட்டாயமான வேண்டுகை. பல்கலைக்கழகத்தில் பட்டத்தை நிறைவு செய்தவர்கள் விவசாயத் துறையில் தங்கள் செயற்றிறனைக் காட்டுவதற்கு முன்வரவும், அதற்கான சந்தர்ப்பத்தை வழங்கவும் வேண்டும்.

விவசாயம் என்றவுடன் எங்கள் மனக்கண்ணில் தோன்றும் புலக் காட்சியை வைத்துக் கொண்டு உழுதுண்டுவாழும் உயர் தொழிலை வெறுப்பது மடமையிலும் மடமை.

முன்னைய விவசாயத்திற்கும் தற்போதைய விவசாயச் செய்கைக்குமிடையில் நிறையவே வேறுபாடுகள் உண்டு.

நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் விவசாயத் துறையை எங்கள் மண்ணில் முன்னெடுக்க பல்கலைக்கழகப் பட்டதாரிகள் முன்வர வேண்டும்.

இருபத்தைந்து ஏக்கரில் தென்னஞ் செய்கை, பத்து ஏக்கரில் மாந்தோட்டம், மிகப்பெரும் மாட்டுப் பண்ணை (லாலு பிரசாத் யாதவ் வைத்திருந்தது போல), கோழிப்பண்ணைகள், ஐம்பது ஏக்கரில் மரமுந்திரிகைச் செய்கை இப்படியான சிந்தனையில்,

முகமாலை, பளை, இயக்கச்சி, ஆனையிறவு மற்றும் வன்னிப் பெருநிலப்பரப்பு எங்கும் அரச காணிகளை எங்கள் வேலையற்ற பல்கலைக் கழக பட்டதாரிகளுக்கு வழங்கி அந்தச் சாதனையைச் செய்யலாம். இதைச் செய்தால், ஏ–9 பாதை முழுவதும் பிக்கப் வாகனங்களில் எங்கள் பட்டதாரிகள் பறந்து செல்வர்.

அட! ஐம்பது ஏக்கரில் பறித்த தேங்காயை ஏற்றுவதற்காக பின்னால் ஐந்தாறு லொறிகள். அடே அப்பா!

# ஐந்து சிம் அட்டைகளுக்கு மேல் எவரும் வைத்திருக்க முடியாது

## ஜனவரியில் வருகிறது புதிய சட்டம்

(கொழும்பு)

இலங்கையில் எந்த ஒரு நபரும் அவருடைய பெயரில் ஐந்து சிம் கார்ட்டுக்களுக்கு மேல் கையடக்கத் தொலைபேசிப் பாவனைக்கு வைத்திருக்கு முடியாது என்று பாதுகாப்பு அமைச்சு புதிய சட்ட விதி ஒன்றை உருவாக்கியுள்ளது. இப்புதிய சட்டம் எதிர்வரும் ஜனவரி 1ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகின்றது.

கையடக்கத் தொலைபேசி பாவனையாளர்கள் ஒவ்வொருவரும் எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன் அவர்களுடைய சிம்களை சொந்தப் பெயர்களில் தவறாது பதிவு செய்தல் வேண்டும் என்றும் பதிவு செய்யப்படாத சிம்கள் அத்திகதிக்குப் பின் பாதுகாப்பு அமைச்சால் செயல் இழக்க வைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பைகருத்தில்கொண்டு பாதுகாப்பு அமைச்சு இந்த நடவடிக்கையை எடுப்பதற்கு தள்ளப்பட்டிருக்கின்றது என்று தொலைத்தொடர்புகள் சீராக்கல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஸ பெல்பிட்ட தெரிவித்தார்.

சிலர் 10, 15 சிம் கார்ட்டுக்களை உடைமையில் வைத்திருந்து பாரிய அளவில் குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றார்கள் என்பதை ஆணைக் குழுவும் பாதுகாப்பு அமைச்சும் கண்டுபிடித்துள்ளன என்றும் அவர் கூறினார்.

கடத்தல்காரர்கள், பாதாள உலகத் தாதாக்கள், போதைப்பொருள் கடத்தற்காரார்கள் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்ற பொழுது பெரும்பாலும் வேறு நபர்களுடைய சிம் கார்ட்டுக்களையே பயன்படுத்துகின்றனர் என்றும் பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் கண்டுபிடித்துள்ளனர் என்றும் அவர் சொன்னார்.

எனவே இத் துஷ்பிரயோகங்களையும் குற்றச் செயல்களையும் தடுத்து நிறுத்த கண் முன் இருக்கின்ற ஒரேஒரு உபாயம் சிம் கார்ட்டுக்களை உத்தியோகபூர்வமாக பதிவு செய்விக்கின்றமையே என்று அவர் குறிப்பிட்டார். (ச–5)

## புலிகளுக்கு உதவிய குற்றச்சாட்டில் தொழிற் சங்கச் செயலாளர் கைது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்கினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் மனோ கணேசனின் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணியின் தொழில் சங்க செயலாளர் லச்சுமணன் பாரதிதாசன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் தலவாக்கலையில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

லச்சுமணன் பாரதிதாசன் கடந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தலின் போது ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளராக போட்டியிட்டிருந்தார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின கீழ் காலஞ்சென்ற முன்னாள் அமைச்சர் பீ.சந்திரசேகரனுடனும் அவர் பணியாற்றி வந்துள்ளார்.

இதேவேளை, கடந்த 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியினில் லச்சுமணன் பாரதிதாசன் கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்ததாகவும் பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இவர் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டபோது அவரது இல்லத்தில் இருந்து இரண்டு ரீ 56 ரக துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ச–5)

## மோ.சைக்கிள் விபத்து முதியவர் படுகாயம்

(கோப்பாய்)

இருபாலையில் மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி படுகாயம் அடைந்த நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 11 மணியளவில் இருபாலைச் சந்திப்பகுதிகளில் இவ் விபத்து இடம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியை கடக்க முற்பட்ட முதியவர் ஒருவருடன் மோதியதில் இவ் விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த இராசையா (வயது 58) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச)

## பாடசாலை மாணவர்களுக்கு முட்டை வழங்கும் திட்டம்

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் ஒவ்வொரு மாணவர்களுக்கும் இன்று முதல் ஒவ்வொரு முட்டை வீதம் தினமும் வழங்கப்படவுள்ளது.

இப் பிரதேச மாணவர்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மிகவும் நலிவுற்றிருப்பதை அடுத்து வடமராட்சி வலயக் கல்வி அலுவலத்தினர் வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு முட்டை வழங்கும் சத்துணவுத் திட்டத்தை இன்று முதல் ஆரம்பித்துள்ளனர். (ஸ்ரீ–43)

## இராணுவத்தின் ஏற்பாட்டில் சிங்கள மொழிப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

சிங்கள மற்றும் தமிழ் மக்களிடையே புரிந்துணர்வை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் மானிப்பாய் 513ஆவது படைப் பிரிவு தலைமையகத்தினால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் இளைஞர் யுவதிகள் 100 பேருக்கு சிங்கள மொழியினை பயிற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பலாலி பாதுகாப்பு படைகளின் தலைமையகம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு ஒவ்வொரு சனிக்கிழமை மாலை 2 மணியிலிருந்து 4.30 மணிவரை 4 மாத காலம் மானிப்பாய் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இப்பயிற்சி நெறி பிரபல மொழிப்பயிற்சி ஆலோசகர் பேரா சிரியர் எஸ்.லீலா கிருஸ்ணனால் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பயிற்சி நெறியில் கலந்துகொள்ள விரும்பும் இளைஞர் யுவதிகள் அதற்கான விண்ணப்பத்தை எதிர்வரும் 28 ஆம் திகதி பெற்று முறையாக பூர்த்தி செய்து அம் முகாமிலேயே ஒப்படைத்து அன்றைய தினமே தம்மை பதிவு செய்து கொள்வதற்காக மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு மாலை 2 மணிக்கு சமுகமளித்தல் வேண்டும்.

விண்ணப்பபடிவங்களை 513 ஆவது படைப்பிரிவு தலைமையகம் (உடுவில்), 23 ஆவது கெமுனு படைத் தலைமையகம் (மாவடி), 14ஆவது (சுயே), இலங்கை காலாட் படை தலைமையகம் (சுன்னாகம்), 9ஆவது இலங்கைத் தேசிய பாதுகாப்பு படையணித் தலைமையகம் (மானிப்பாய்) ஆகிய முகாம்களின் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ சொற்பொழிவுகள்



நம்பிக்கை இழந்த நெஞ்சின் அடித்தளத்திலிருந்து 'நம்பிக்கையே கிடையாதா? தப்பிக்க வழியே கிடையாதா' என்ற குரல் எழுந்து மேலே சென்றது. அந்தக் குரல் கருணைத் திருவுருவின் அரியாசனத்தை அடைந்தது. அங்கிருந்து நம்பிக்கையும் ஆறுதலும் அளிக்கும் சொற்கள் கீழே வந்தன. அவை ஒரு வேத முனிவரைக் கிளர்ந்தெழச் செய்ய அவர் எழுந்து நின்று உலகோரைப் பார்த்து கம்பீர தொனியுடன் பின்வரும் செய்தியை முழங்கினார். 'ஓ அழயாத பேரின்பத்தின் குழந்தைகளே! கேளுங்கள். உயர் உலகங்களில் வாழ்பவர்களே! நீங்களும் கேளுங்களும். அனைத்து இருளையும், அனைத்து மாயையையும் கடந்து ஆதி முழுமுதலை நான் கண்டு விட்டேன். அவரை அறிந்தால் தான் நீங்கள் மீண்டும் இறப்பிலிருந்து காப்பாற்றப்படுவீர்கள்.'

# நைரோபியில் உதைபந்தாட்ட அரங்க நெரிசலில் சிக்கி ஏழுபேர் பலி

கென்யாவின் தலைநகரான நைரோபியில் உதைபந்தாட்டப் போட்டியொன்றைக் காணச் சென்றவர்களுள் ஏழுபேர் அங்கு ஏற்பட்ட சனநெரிசலில் சிக்கி பலியாகினர். நைரோ பியின் நயாயோ தேசிய விளையாட்டரங்கிலேயே இந்த அனர்த்தம் இடம் பெற்றது.அந்த நாட்டின் பிரபல அணிகள் இரண்டு மோதிக்கொள்ளும் போட்டியைக் காண பெருந் திரளான ரசிகர்கள் திரண்டனர்.

அவ்வேளையில் மைதானத்துக்குள் பிரவேசிக்க முற்பட்டபோது ஏற்பட்ட நெரிசலில் ஆறு பேர் ஸ்தலத்திலேயே பலியானதுடன் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் உயிரிழந்தார்.

சம்பவம் இடம்பெற்றபோது மைதானத்துக்குள் பார்வையாளர்கள் நிரம்பி வழியும் ஒரு நிலை இருக்கவில்லை. பின் எப்படி நுழைவாயிலில் நெரிசல் ஏற்பட்டது என்று உதைபந்தாட்டத்துறை அதிகாரிகள் கேள்வி எழுப்பியுள்ளனர். இந்த சம்பவம் பற்றி மேலதிக விசாரணைகளுக்கும் உத்தரவிடப் பட்டுள்ளது. (ஸ்ரீ-2)



தாய்வானில் பெய்த கனமழை மற்றும் மெகி புயல் தாக்கியதால் பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. கூவாங்டாங் மாகாணத்தில் குடியிருப்புப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த கார்களை மூழ்கடிக்கும் அளவுக்கு வெள்ளம் சூழ்ந்திருந்தது.

# தேசிய திரைப்பட விழாவில் பசங்க திரைப்படத்திற்கு மூன்று விருதுகள்



டில்லியில் தேசிய திரைப்பட விருது வழங்கும் விழா நடைபெற்றது. அமிதாப் பச்சன் சிறந்த நடிகர் விருது பெற்றார். 'பசங்க' தமிழ் படத்தில் நடித்த 2சிறுவர்கள் சிறந்த குழந்தை நட்சத்திரங்களுக்கான விருது பெற்றனர். கடந்த ஆண்டுக்கான 57 ஆவது தேசிய திரைப்பட விருதுகள் சமீபத்தில் அறிவிக்கப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட கலைஞர்களுக்கு விருது வழங்கும் விழா, டில்லியில் நடைபெற்றது. ஜனாதிபதி பிரதீபாபாட்டீல், இவ் விருதுகளை வழங்கினார்.

'பா' என்ற இந்திப் படத்தில் நடித்ததற்காக, நடிகர் அமிதாப்பச்சனுக்கு சிறந்த நடிகர் விருது வழங்கப்பட்டது. விருதையும் ,ரூ.50 ஆயிரம் ரொக்கப்பரிசையும் அவர் பெற்றார்.

திரையுலகின் உயரிய விருதான 'தாதா சாகேப் பால்கே' விருது, பழம்பெரும் தயாரிப்பாளர் டி.ராமாநாயுடுவுக்கு வழங்கப்பட்டது. சிறந்த நடிகைக்கான விருதை 'அபோகோமான்'வங்காளப் படத்துக்காக அனன்யா சாட்டர்ஸி பெற்றார்.

அப்படத்தின் இயக்குநர் ரிடுபர்னோ கோர்ஷுக்கு, சிறந்த இயக்குநர் விருது கிடைத்தது. பழசிராஜா படத்துக்காக, சிறந்த பின்னணி இசைக்கான விருது, இளைய ராஜாவுக்கு கிடைத்தது. அவர் விழாாவுக்கு வராததால், அவர் சார்பில் விருது பெற்றுக் கொள்ளப்பட்டது.பசங்க தமிழ்ப்படம் 3 விருதுகளை தட்டிச் சென்றது.

சிறந்த தமிழ்ப்படம், சிறந்த வசனம் (ரைடக்டர் பாண்டிராஜ் சிறந்த குழந்தை நட்சத்திரம் ஆகிய விருதுகளைப் பெற்றது. சிறந்த தமிழ்ப்படத்துக்கான விருதை தயாரிப்பாளர் சசிகுமாரும் இயக்குநர் பாண்டியராஜும்இணைந்து பெற்றனர்.

குழந்தை நட்சத்திரங்களான விருதை பசங்க படத்தில் நடித்த சிறுவர்கள் ஸ்ரீராம், டி.எஸ்.கிஷோர் ஆகியோருக்கு ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் வழங்கினார். பழசிராஜா படத்துக்காக, சிறந்த ஒலிப்பதிவுக்கான விருதை ரசூல் பூக்குட்டி பெற்றார். மகதீரா தெலுங்குப் படத்துக்காக கே.சிவசங்கர் சிறந்த நடன இயக்குநருக்கான விருது பெற்றார். 'தேவ் டி' படத்துக்காக, சிறந்த இசையமைப்பாளர் விருதை அதித் திரிவேதி பெற்றார். (ஸ்ரீ-2)

# சர்வதேச நாணய நிதியத்தை மறுசீரமைப்பதற்கு திட்டம்

## ஜி-20 உச்சிமாநாட்டில் முடிவு

சர்வதேச நாணய நிதியத்தில் மறு சீரமைப்புக்களை மேற்கொள்ள தென்கொரியாவில் இடம்பெற்ற ஜி -20 மாநாட்டில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

உலகின் முன்னணிப் பொருளாதாரங்கள் என இனம்காணப்பட்ட நாடுகளின் அமைப்பான ஜி-20 அமைப்பின் நிதிய மைச்சர்கள் கலந்து கொண்ட உச்சி மாநாடு தென்கொரியாவில் இடம்பெற்றது.

அதில் உலகில் பிரதானமாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் குரல்களுக்கும் மதிப்பளிக்கும் வகையில் சர்வதேச நாணய நிதியத்தை மறுசீரமைக்கவேண்டும் என்ற முடிவு எட்டப்பட்டுள்ளது. ஐ.நா.நிதியத்தின் வாக்குரிமையில் ஆறு வீதத்தை வேகமாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு ஒதுக்குவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

நாணய நிதியத்தின் ஆளுநர் சபையிலும் இந் நாடுகளுக்கு மேலதிக ஆசனங்களை ஒதுக்குவதென்றும் முடிவு செய்யப் பட்டுள்ளது.


இதன்பிரகாரம் விரைவில் ஐரோப்பிய நாடுகள் இரண்டின் ஆசனங்கள் காலியாகின்றபோது இந்த இடங்கள் மேற்படி நாடுகளுக்கு வழங்கப்படவுள்ளன. எவ்வாறாயினும் முக்கிய முடிவுகளில் அமெரிக்கா தொடர்ந்தும் வீட்டோ உரிமையைக் கொண்டிருக்கும். (ஸ்ரீ-2)

# சீனா , தைவான் மற்றும் தாய்லாந்து நாடுகளைத் தாக்கிய 'மெகி' சூறாவளி

## 67 பேர் பலி ; பலரைக் காணவில்லை

(பீஜிங்)

சீனா, தைவான் மற்றும் தாய்லாந்து நாட்டை 'மெகி' சூறாவளி நேற்றுமுன்தினம் பலமாகத் தாக்கியது. மூன்று நாடுகளிலும் கடும் மழை பெய்ததோடு, பயங்கரசூறாவளி காற்றும் வீசியது. இதனால், சீனாவில் மூன்று இலட்சம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். தைவானில் ஒன்பது பேரும், தாய்லாந்தில் 32 பேரும் சூறாவளிக்கு பலியாகியுள்ளனர்.



ஜி-20 நாடுகளின் நிதியமைச்சர்கள் மாநாடு தென்கொரிய தலைநகர் சியோலில் நடைபெற்றது. இதில் தென்கொரிய நிதி அமைச்சர் யூன் ஜூயாங் ஹூங் (வலது), அவுஸ்திரேலிய நிதி அமைச்சர் வெயினி ஸ்வான் ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடினர்.


பசுபிக் பெருங் கடலில் உருவாகும் சூறாவளி, ஒவ்வோர் ஆண்டின் பிற்பகுதியிலும் சீனா, ஜப்பான், தாய்லாந்து மற்றும் பிலிப் பைன்ஸ் நாடுகளைத் தாக்கும்.

இந்நிலையில், கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு , சீனாவின் பியூஜியான் மாகாணத்தின் தென்பகுதியில் உள்ள ஜாங்பூகவுண்டி நகரை நேற்று முன்தினம் காலை சூறாவளி பலமாகத் தாக்கியது. 'மெகி' என பெயர் சூட்டப்பட்ட இந்த சூறாவளி தாக்கியபோது, மணிக்கு 140 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசியது.

அத்துடன் பலத்த மழையும் பெய்ததால், 2.70 இலட்சம் பேர், அவர்களின் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மேலும் பலர் பாதுகாப்புக் காரணமாக வெளியேற் றப்பட்டு வருகின்றனர்.

ஜன்ஜோவூ,ஷியாமென் மற்றும் குவான்ஜ் நகரங்களையும் அடுத்த 12 மணி நேரத்துக்குள் 'மெகி' சூறாவளி தாக்கலாம் என வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. பலத்த சூறாவளியால் , பல நகரங்களில் இருந்து புறப்பட வேண்டிய விமானங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. பிலிப்பைன்ஸ் நாட்டில் இச் சூறாவளிக்கு இதுவரை 26 பேர் பலியாகியுள்ளனர். அங்கு பல வீடுகள், விளைநிலங்கள் பலத்த சேதம் அடைந்துள்ளன.

தைவானில், சூறாவளி காரணமாக பயங்கர மழை பெய்தது. இதனால், சுவாவோ நகரில் உள்ள வெண் மேகக்கோவில் என்ற புத்தகோவில் அருகில் நிலச்சரிவு ஏற்பட்டு,



கோவில் மண்ணுக்குள் புதைந்தது.

இச்சம்பத்வத்தில், இரண்டு புத்தமத பெண் துறவிகள் உட்பட ஒன்பது பேர் பலியாயினர். நிலச்சரிவால் லான் நகரில், பாறைகள் விழுந்து 500 மீ. தூரத்துக்கு வீதிகள் பலத்த சேதம் அடைந்துள்ளன. பாறைகள் விழுந்ததில் 30 வான்கள்,பேருந்துகள் மற்றும் கார்கள் சிக்கிக் கொண்டன.

சீனாவில் இருந்து தைவானுக்கு சுற்றுலா வந்த சீனப் பயணிகள் 23 பேரைக் காணவில்லை 'மெகி' சூறாவளியால் ஏற்பட்ட பலத்த மழை காரணமாக தாய்லாந்து நாட்டின் பல பகுதிகள் வெள்ளத்தில் மிதக்கின்றன. ஆயிரக் கணக்கான வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. 10 இலட்சம் மக்களின் வீடுகள்,விளைநிலங்கள் வெள்ளத்தில் மூழ்கி விட்டன. வெள்ளத்தால் அடித்துச் செல்லப் பட்டதில், அந்நாட்டில் பலியானோர் எண்ணிக்கை 32 ஆக உயர்ந்துள்ளது. (ஸ்ரீ-2)

# மூன்றாவது போட்டி மழையால் ரத்து ஒருநாள் தொடர் இந்தியா வசமானது

(மர்கோவா)

இந்திய-அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் போட்டி, மைதானம் ஈரமாக இருந்த காரணத்தினால் இரத்து செய்யப்பட்டது.

இதையடுத்து 23 ஆண்டுகளுக் குப் பின், சொந்த மண்ணில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக ஒருநாள் தொடரை இந்திய அணி கைப்பற்றியது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட அவுஸ்ரேலிய அணி, 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்றது. கொச்சியில் நடக்க இருந்த முதல் போட்டி ஒரு பந்து கூட வீசப்படாமல் இரத்து செய்யப்பட்டது. விசாகப்பட்டினத்தில் நடந்த இரண்டாவது போட்டியில் இந்திய அணி 5 விக்கெட் வித்தியா சத்தில் வெற்றி பெற்று, தொடரில் 1:0 என முன்னிலையில் இருந்தது.

இதனிடையே நேற்று மர்கோவா வில் மூன்றாவது போட்டி நடக்க இருந்தது. கடந்த சில நாட்களாக இங்கு அதிக மழை பெய்து வந்தது. இதனால் இந்த போட்டியும் மழை காரணமாக திட்டமிட்டபடி நடக்குமா என சந்தேகம் ஏற்பட்டது.

ஆனால் எதிர்பார்ப்புக்கு மாறாக, காலையில் இருந்து நல்ல வெயில் காணப்பட்டது. மைதானத்தை மூடியிருந்த தார்ப்பாய்கள் அகற்றப்பட்டு, ஆடுகளம் சிறப்பாக காணப்பட்டது.

ஆனால் மைதானத்தில் பிறபகுதிகள் ஈரமாக காணப்பட்டது. பின் 12.15க்கு மைதானத்தை சோதித்த போட்டி நடுவர் கிறிஸ் பிராட் ஈரப்பதம் அதிகமாக இருப்பதால், போட்டி இரத்து செய்யப்படுவதாக அறிவித் தார்.

இதையடுத்து மூன்றாவது ஒரு நாள் போட்டியும் ஒரு பந்து கூட வீசப் படாமல் இரத்து ஆனது.

**புதிய சாதனை**

போட்டி இரத்தானதை தொடர்ந்து, இந்திய அணி அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒரு நாள் தொடரை, 23 ஆண்டுகளுக்குப்பின் 1:0 என கைப்பற்றி அசத்தியது.

ஏற்கனவே டெஸ்ட் தொடரை 2:0 என வென்றிருந்தது. இவ்வாறு அவுஸ்திரேலியாவுக்கு எதிராக டெஸ்ட் மற்றும் ஒருநாள்



தொடர்களை, இந்திய அணி வென்று அசத்தியது இது தான் முதன் முறையாகும்.

## மேல்முறையீட்டை வாபஸ் பெற்றார் ஆசிப்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் வேகப் பந்துவீச்சாளர் மொஹமட் ஆசிப் தனக்கு ஐ.சி.சி.விதித்த இடைக்காலத் தடைக்கு எதிராக செய்த மேல்முறையீட்டை வாபஸ் பெற்றுள்ளார்.

பாகிஸ்தான் வீரர்களான சல்மான் பட்; மொஹமட் அமிர், மொஹமட் ஆசிப் ஆகியோர் மீதான ஆட்ட நிர்ணயசதி குற்றச்சாட்டுகள் காரணமாக சர்வதேச கிரிக்கெட் சபை மேற்படி வீரர்கள் மூவருக்கும் இடைக்கால தடை விதித்துள்ளது.

இதனால் தென்னாபிரிக்க அணிக்கெதிராக ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடைபெறும் சுற்றுப் போட்டிகளுக்கு அவ்வீரர்கள் மூவரும் சேர்க்கப்படவில்லை.

மேற்படி மேல்முறையீடு ஒக்டோபர் 30, 31ஆம் திகதிகளில் டோஹாவில் விசாரிக்கப்படவுள்ளது. இந்நிலையில் தனது மேல்முறையீட்டு மனுவை மொஹமட் ஆசிப் வாபஸ் பெற்றுள்ளார்.

# நியூசிலாந்து அணியுடனான ஒருநாள் தொடரில் இந்திய அணியின் மூத்த வீரர்களுக்கு ஓய்வு

## பி.சி.சி.ஐ. அறிவிக்கவில்லை என்கிறார் தோனி

(மர்கோவா)

நியூசிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடரிலிருந்து, இந்திய முன்னணி வீரர்கள் விலகுவது குறித்து எந்த தகவலும், இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ) இதுவரை தெரிவிக்க வில்லை என அணித்தலைவர் தோனி தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் நியூசிலாந்து அணி 3 டெஸ்ட் போட்டிகள் (நவ. 4-24) கொண்ட தொடரில் பங்கேற்கிறது. அடுத்து 5 ஒரு நாள் போட்டிகளில் (நவ.28-டிச.10) விளையாட உள்ளது. இதற்கு பின் இந்திய அணி, தென்னாபிரிக்கா சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்கிறது. இதில் முதல் டெஸ்ட் எதிர்வரும் டிச.16ஆம் திகதி செஞ்சூரியனில் ஆரம்பமாகிறது. இங்குள்ள சூழ்நிலைக்கு ஏற்ப இந்திய வீரர்கள் தங்களை தயார் படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது.

எனவே, அணித்தலைவர் தோனி உள்ளிட்ட மூத்த வீரர்களை முன்னதாகவே தென்னாபிரிக்காவுக்கு அனுப்ப முடிபு செய்யப்பட்டுள்ளது. இதனால் நியூசிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடரில் தோனி, ஹர்பஜன் உள்ளிட்ட மூத்த வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்படலாம்.

இவர்கள் நியூசிலாந்துடனான டெஸ்ட் தொடர் முடிந்த உடன் தென்னாபிரிக்கா புறப்படுவர் என தெரிகிறது. இதை இந்திய கிரிக்கெட் சபையும் (பி.சி.சி.ஐ) உறுதி செய்துள்ளதாக செய்திகள் வெளியாயின.

இது குறித்து இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் தோனி கூறியதாவது.

நியூசிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடரில் முன்னணி வீரர்கள் விலகுவது குறித்த எந்த தகவலும் இதுவரை பி.சி.சி.ஐ வீரர்களுக்கு தெரிவிக்கவில்லை. இதனால், இது குறித்து தற்போது எதுவும் கூறமுடியாது.

**எழுச்சி தேவை**

ஒரு நாள் போட்டிகளில் கடைசி 10 ஓவர்களில் இந்திய பந்துவீச்சாளர்கள் அதிக ஓட்டங்களை விட்டுக் கொடுக்கின்றனர்.

கடைசி 5 ஓவர்களில் தலா 20 முதல் 25 ஓட்டங்களை விட்டுக் கொடுப்பது ஆட்டத்தின் முடிபை மாற்றி விடும் இத்தவறை விரைவில் திருத்திக் கொள்ள வேண்டும்.

**சிறந்த வீரர்**

இந்திய அணியின் இளம் வீரர் ரெய்னா, சிறப்பாக விளையாடி வருகிறார். துடுப்பாட்டம், களத்தடுப்பில் அசத்துகிறார். அதே சமயம் பகுதி நேர பந்து வீச்சாளராகவும் நம்பிக்கை அளிக்கிறார்.

**நல்ல வாய்ப்பு**

அணியில் இடம் பெற்றுள்ள இளம் வீரர்கள். பொறுப்புணர்ந்து விளையாட வேண்டும். கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி, அணியில் தங்களது இடத்தை உறுதி செய்து கொள்ள வேண்டும். ஒரு நாள் போட்டிகளில் 3 வது வீரராக களமிறங்க வேண்டும் என பலர் ஆலோசனை அளிக்கின்றனர். நான் 3வது வீரராக களமிறங்கி சிறப்பாகவே செயல்பட்டுள்ளேன்.

இதே போல மற்ற வீரர்களாலும், சாதிக்க முடியும். ஆனால் 5 மற்றும் 6 வது வீரராகவே களமிறங்க விரும்புகிறேன். ஏனென்றால் ஆட்டத்தை வெற்றிகரமாக முடிக்க அனுபவம் வாய்ந்த வீரர்கள் தேவை. இவ்வாறு தோனி தெரிவித்தார்.

## ஊக்கமருந்துப் பாவனை ஷீரோ ஆகியிருக்கும் ஹீரோ

இந்தியாவின் தலைநகர் டில்லியில் இடம் பெற்று முடிந்த பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கத்தை இலங்கைக்கு வென்று கொடுத்த குத்துச்சண்டை வீரர் மஞ்சு வன்னியாராட்சி தடை செய்யப்பட்ட ஊக்கமருந்துகளை பயன்படுத்தியிருக்கிறார் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனால் இப்பதக்கம் கைநழுவிப் போகக் கூடிய சந்தர்ப்பம் நிறையவே காணப்படு கின்றது. இலங்கைக்கு பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் இம்முறை கிடைத்திருக்கும் ஒரேயொரு தங்கப்பதக்கம் இதுவாகும்.

ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ மஞ்சுவை டில்லியில் நேரடியாகப் பாராட்டினார் என்பதும் குறிப்பிடத்தக்கது:

# தமிழினப் படுகொலை...

திருலோகமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் கடந்த 60 வருடங்களாக இலங்கை அரசு தமிழ் இனத்துக்கு எதிராக திட்டமிட்டு மேற்கொண்டு வரும் இனப்படுகொலை தொடர்பில் சுயாதீன விசாரணை ஒன்றை சர்வதேசம் நடத்த வேண்டும்.

**தண்டனையால் தீர்வு கிடைக்காது**

தற்போது இலங்கை அரசுக்கு எதிராக பல சர்வதேச நாடுகள் செயற்படுகின்றன. இந்நாடுகள் இலங்கை அரசு மேற்கொண்ட போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும் என்பதில் அக்கறையாகவுள்ளன.

அவ்வாறு போர்க்குற்றம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டால் அதற்கு பின்னணியாக இருந்த இலங்கை அரசுக்கு சர்வதேச நீதிமன்றால் தண்டனை வழங்கப்படும்.

இதனால் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வுக் கிடைக்கப் போவதில்லை. ஆனால் இலங்கையில் நடைபெற்றது திட்டமிடப்பட்ட இனப் படுகொலை என சர்வதேசத்திற்கு தமிழ் மக்கள் ஒருமித்து அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இதன் மூலமே சர்வதேசம் தமிழினத்தை பாதுகாப்பதற்கு நிரந்தர அரசியல் தீர்வொன்றை இலங்கை அரசிடம் பெற்றுக் கொடுப்பார்கள்.

எனவே 60 வருடங்களாக நடைபெற்று வரும் தமிழ் மக்களை திட்டமிட்டு அழிக்கும் இனப் படுகொலை தொடர்பில் விரிவான ஆவணம் ஒன்றை நாம் தயாரிக்க வேண்டும்.

இப் பணியினை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆரம்பித்துள்ளது. இதன் மூலம் சர்வதேச சமூகத்திடம் எமது இனத்தை திட்டமிட்டு அளிக்கும் இலங்கை அரசின் இனப் படுகொலையை நிரூபிக்க முடியும்.

இவ்வாறு நடைபெற்ற இனப் படுகொலையின் ஒரு பகுதியே போர்க் குற்றம் என் பதை சர்வதேசத்திற்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

தற்போது இலங்கை அரசு மேற்கொண்ட போர்க் குற்றங்களுக்கு எதிராக ஐ.நாவும் சர்வதேச நாடுகளும் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை திசைத்திருப்பவோ ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இனப் படுகொலையை தமிழ்த் தேசத்தின் மீது மேற்கொண்டது இலங்கை அரசே ஆகும் அத்தகைய இனப்படுகொலையை மேற்கொண்ட இலங்கை அரசு, தான் மேற்கொண்ட இனப்படுகொலை தொடர்பான விசாரணைகளை தானே நடத்த முற்படுவது கேலிக்குரியதாகும்.

அவ்வாறு நடத்தினால் கூட அந்த விசாரணைகள் நீதி நியாயம் வழங்கும் வகையில் பக்க சார்பற்றதாக இருக்க முடியாதென்பதே உண்மையாகும். இதனை நிரூபிப்பதற்கு கடந்த அறுபது வருடங்களாக அளவுக்கதிகமான சான்றுகள் உள்ளன.

கடந்த காலங்களில் இனப்பிரச்சினையோடு தொடர்புபட்ட விதத்தில் பல்வேறு காரணங்களுக்காக இலங்கை அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் நடவடிக்கைகள் காலத்தை இழுத்தடித்து, எந்த வித பலனையும் தராத ஏமாற்றும் முயற்சிகளாகவே நடந்து முடிந்தன.

மேலும் சிங்கள அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்தவாறு மேற்கொண்ட இனப் படுகொலை தொடர்பாக சாட்சியங்களை அளிக்கக் கூடிய பாதுகாப்பான சூழல் இல்லை. இன்னமும் கடத்தல், கொலைகள், கொலை மிரட்டல்கள் என்பன தொடர்ச்சியாக இடம் பெற்று வருவது இந்த அச்ச சூழலை வெளிப் படுத்துகின்றது.

அத்துடன் ஆணைக்குழுவுக்கு இனப்படுகொலை சம்பந்தமாகவோ அல்லது குறைந்த பட்சம் போர் குற்றங்கள் இடம் பெற்றமை தொடர்பாகவோ விசாரணை மேற்கொள்வதற்கான ஆணை எதுவும் வழங்கப் பட்டிருக்கவில்லை.

நிலைமை இவ்வாறு இருக்க கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவை நியமிப்பதன் மூலம் இனப் படுகொலை அல்லது குறைந்த பட்சம் போர் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணைக் குழுக்கள் ஏற்படுத்தப்படு வதனை தடுக்க முடியும் என்ற நம்பிக்கையிலேயே அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்மக்கள் மீதான இனப்படுகொலை பற்றிய விசாரணைகள் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் நடைபெறுமாயின் அந்த விசாரணைகள் நேர்மையாகவோ தமிழ் மக்களுக்கு பலன் தருவதாகவோ அமைய மாட்டாது என்பதோடு தமிழ் மக்கள் மீதான இனப் படுகொலையை மூடி மறைப்பதற்கே வழி வகுக்கும்.

**சாட்சியம் அளிப்பதில்லை**

எனவே தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு சாட்சியமளிப்பதில்லை என தீர்மானித்துள்ளது. அத்துடன் இந்த ஆணைக்குழுவுக்கு ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் சாட்சியமளிக்குமாயின் அது இனப்படு கொலையை மூடி மறைக்கும் செயற்பாட்டிற்கு துணை போவதாகவே அமையும் எனவும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற, இடம் பெற்று வரும் இனப்படுகொலையை விசாரிப்பதற்காக சர்வதேச சுயாதீன விசாரணை ஒன்றுக்கு வலியுறுத்துவதுடன் அவ்வாறான விசாரணை ஒன்று இடம்பெற்றால் அதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கும் என்றும் உறுதி அளிக்கிறது. (ச-5)







மன்னார் தமிழ்ச் செம்மொழி விழாவில் மூன்றாம் நாள் இலக்கிய விழாவில் தலைமையுரை இடம்பெறுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு தொகுதியினரையும் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

# இலங்கை அகதிகளுக்கு எதிரான சட்டமூலத்திற்கு கனடாவில் எதிர்ப்பு

(ரொரன்டோ)

கனேடிய அரசாங்கம் இலங்கை அகதிகளை தமது நாட்டுக்குள் வருவதை தடுக்கும் பொருட்டு கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்திய சட்டமூலத்திற்கு முதல் தடவையாக ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவை தளமாக கொண்டு இயங்கும் டொரன்டோ நிவ்ஸ் இணையத்தளம் இந்த ஆட்சேபனையை தெரிவித்துள்ளது.

கனடா அரசாங்கம் இந்த சட்டமூலத்தை கொண்டுவந்தமை நாட்டிற்கு வரும் சட்டவிரோத அல்லது கடத்தல்காரர்களினால் அழைத்து வரப்படுபவர்களை பொறுத்தவரை நன்மை பயக்கக்கூடியதாக இருக்கும். எனினும் இந்த சட்டத்தினால் நாட்டுக்கு வருகின்ற உண்மையான அகதிகளும் பாதிக்கப்படுவர் என டொரன்டோ நிவ்ஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

புதிய சட்டத்தின் படி அகதி ஒருவர் ஒரு வருட காலம் சிறையில் வைக்கப்படுவார் என்பதன் மூலம் சிறையில் உள்ள அகதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் சாத்தியம் உள்ளதாக குறிப்பிட்டுள்ள குறிப்பிட்ட இணையத்தளம், அவுஸ்திரேலியா, கிறிஸ்மஸ் தீவில் முகம் கொடுக்கும் நெருக்கடிக்கு ஒத்த நெருக்கடியை இது ஏற்படுத்தலாம் என தெரிவித்துள்ளது.

பல்வேறு அழுத்தங்களுக்கு பின்னரே அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பிக்கலாம்.

அவ்வாறு அதற்கு அகதி அந்தஸ்த்து வழங்கப்பட்டாலும், 5 வருடங்கள் வரை நிரந்தர குடியுரிமை வழங்கப்பட மாட்டாது என்ற ஏற்பாடுகளும் புதிய சட்டத்தில் உள்ளன.

கனடாவில் அகதியாக அங்கீகாரம் பெற்ற ஒருவர் மீண்டும் தமது சொந்த நாட்டுக்கு செல்ல முடியாது என்ற ஏற்பாடு மனித உரிமைகளை மீறும் செயற்பாடு என்றும் இணையத்தளம் குற்றம் சுமத்தியுள்ளது. (ச-5)

## முத்திரை பெற்றுக்கொள்ள வரிசையில் காத்திருப்பு

யாழ்.செயலகத்துக்கு அருகிலுள்ள சுண்டுக்குளி தபாலகத்தில் முத்திரைகளை பெற்றுக் கொள்வதற்கு வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை காணப்படுவதாக மக்கள் தெரிவித்தனர்.

யாழ்.செயலகத்தில் பிறப்பு மற்றும் காணிப் புப் பதிவுச் சான்றிதழ்களைப் பெறுவோரின் எண்ணிக்கை அண்மைக் காலமாக அதிகரித்துக் காணப்படுகின்றது. இதற்குத் தேவையான முத்திரைகளை அருகிலுள்ள தபாலகத்திலேயே பெற்றுக் கொள்ள முடியும்.

அதிகளவு மக்கள் தபாலகத்தில் இந் நிலையில் கூடுவதால் முத்திரையைப் பெற வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டது. இதேவேளை முத்திரை விநியோகத்தில் ஒருவர் மட்டுமே ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## பொலிஸ்மா அதிபர் நேரில் சென்று விசாரணை

கற்பிட்டிய அனல் மின் நிலையத்தில் நேற்று காலை இடம்பெற்ற தீ விபத்து தொடர்பாக ஆராய்வதற்காக பொலிஸ்மா அதிபர் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று திரும்பியிருக்கிறார்.

தீ விபத்து சம்பந்தமாக பொலிஸ்மா அதிபர் நேற்று மாலை நேரில் சென்று ஆராய்ந்ததுடன் அதிகாரிகளுடன் மேலோட்டமான விசாரணையையும் நடத்தியிருக்கின்றார்.

புத்தளத்தின் சுற்றுப்புறங்களிலிருந்தும் கொழும்பிலிருந்தும் விரைந்த தீயணைப்பு படையினர் முழுமையாக தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதாகவும் அறிய முடிகிறது. இத் தீவிபத்தினால் ஏற்பட்ட சேத விபரங்கள் தொடர்பான தகவல்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. (ச-5)

# சிங்கள மக்களின் மீள்குடியமர்வை தடுக்க குடாநாட்டு மக்கள் ஒன்றுபடவேண்டும்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மீள்குடியேற்றம் என்ற போர்வையில் சிங்கள மயமாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த முயற்சியை தடுக்க யாழ். குடாநாட்டு மக்கள் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அவர்கள் வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு,

நூற்றுக்கணக்கான சிங்களக் குடும்பங்கள் யாழ்.புகையிரத நிலையத்திலும் ஏனைய இடங்களிலும் திடீரென வந்து இறங்கியுள்ளன. அவர்கள் ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்படும் முன்னர் யாழ்ப்பாணத்தில் வசித்து வந்துள்ளதாக கூறுகின்றனர். ஆனால் தாம் மீண்டும் யாழ்ப்பாணத்தில் குடியமர விரும்பி இங்கு வந்துள்ளதாகவும் கூறியுள்ளனர்.

தாம் குடியமர்வதற்கான ஏற்பாடுகளை செய்துதரும்படி அரசாங்க அதிபரிடமும் அமைச்சர்களிடமும் கோரியுள்ளனர்.

இவ்வாறு வந்திறங்கியுள்ளவர்களிடம் சொந்தக் காணி உறுதி இருக்குமாயின் அவர்கள் அவர்களது உறுதிக் காணிகளில் மீளக் குடியமர்வதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை.

ஆனால் சொந்தக் காணி உறுதி இல்லாமல் 30 வருடங்களுக்கு முன்னெப்பொழுதோ யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தவர்கள் என்பதனை மட்டும் சாட்டாகக் கூறிக் கொண்டு யாழ்ப்பாணம் வந்திருப்பவர்களுக்கு இன்றைய சூழ்நிலையை பயன்படுத்தி காணிகளை பகிர்ந்து வழங்க முயற்சிப்பதனை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முழுமையாக எதிர்க்கின்றது.

இவ்வாறு வந்துள்ளவர்களுக்கு காணிகளை பகிர்ந்தளிக்கும் நோக்கில் பொது மக்களுக்குச் சொந்தமான ஆனால் நீண்டகாலம் பயன்படுத்தப்படாமல் உள்ள தனியார் காணிகளை அரசு கையகப்படுத்தக் கூடிய ஆபத்து உள்ளது என்பதனையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இந்த விடயத்தில் யாழ்.குடாநாட்டிலுள்ள மக்கள் விழிப்புடன் செயற்படாவிட்டால் அல்லது ஒற்றுமையுடன் இம் முயற்சியை தடுத்து நிறுத்தாவிட்டால் சிங்களக் குடியேற்றங்கள் மூலம் குடாநாட்டை சிங்கள மயமாக்குவதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக இது அமைந்து விடும் என்பதனையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் என்றுள்ளது. (ச-5)

## புலிகளின் வலையமை...

இதனடிப்படையில், விடுதலைப்புலிகளின் சர்வதேச வலையமைப்பின் செயற்பாடுகள் சம்பந்தமாகவும், அதன் பரவல் குறித்தும் அமெரிக்க பாதுகாப்பு பிரிவினருக்கு சரியான முறையில் தெளிவுப்படுத்தவும், அவர்களுடன் தகவல்களை பரிமாறிக்கொள்ளவும் இலங்கை தூதரகம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

விடுதலைப்புலிகளின சர்வதேச வலையமைப்பு தற்போது, புலிகளின் பெயரை கைவிட்டு, வேறு பெயர்களில் அமைப்புகளை ஸ்தாபித்துள்ளதாகவும் பல அரசியல் அமைப்புகளாகவும், அரச சார்பற்ற நிறுவனங்களாகவும் அவர்கள் இரகசியமான முறையில் அமெரிக்காவில் இயங்கி வருகின்றனர் என அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் ஜாலிய விக்ரமசூரிய தெரிவித்துள்ளார். (ச-5)

## பொன்சேகா...

வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கோலமுன சோமவன்ச தேரர், பெட்ரிக் பெர்னாண்டோ பிதா, மௌவி அல்ஹாஜ் ஹசன் காசீம் மற்றும் விக்னேஷ்வர் சர்மா ஆகிய மதத் தலைவர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர். (ச-5)

## வேலணை மற்றும்...

தடையும் நீக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, கடற்படையின் வட பிராந்திய கட்டளைத் தளபதி ரியல் அட்மிரல் எஸ்.எம்.ஏ.வீரசேகர, தீவக கடற்படைத் தளபதி கப்டன் டி.எல்.எம்.ஏ.திஸாநாயக்க, தீவக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் லலித் பிறேமரட்ண, ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் த.சிறிமோகனன், வேலணை பிரதேச செயலாளர் எம்.நந்தகோபாலன் ஆகியோரும் கடல் படையினர் மற்றும் ஏராளமான பொதுமக்களும் பிரதேசத்தை விடுவித்து போக்குவரத்துத் தடையை நீக்கும் சம்பிரதாய வைபவத்தில் கலந்து கொண்டனர்.

தடை நீக்கப்பட்ட வீதிகளில் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களை செலுத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா போக்குவரத்தை ஆரம்பித்து வைத்தார். (ச-5)

பான்சி கடைக்கு வேலையாள் தேவை

யாழ். நகரிலுள்ள பான்சி மற்றும் மணிக்கூடு விற்பனை நிலையத்திற்கு பெண்பிள்ளைகள் வேலைக்குத் தேவை. நகரிற்கு அண்மையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:-0779793300
021 222 7638

(2732)

## போர்க்குற்ற சாட்சியங்...

விரைவில் அறிவிக்கப்படும் எனக் கூறியுள்ள தமிழர் பேரவை போர்க்குற்றம் புரிந்த இலங்கை மீது சர்வதேச சுயாதீன விசாரணையை வலியுறுத்தும் வகையில் மக்கள் தமது சாட்சியங்களை வழங்க முன்வரவேண்டும் என அழைப்பு விடுத்துள்ளது.

சாட்சியம் வழங்குவோரின் விபரங்கள் மிக இரகசியமாகப் பேணப்படும் என ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது போன்று சாட்சியம் அளிக்க தம்மிடம் உதவிகோருவோர் பற்றிய விபரங்களும் இரகசியமாக பேணப்படும் என பிரித்தானிய பேரவை அறிவித்துள்ளது. (ச-5)

## புலிகளின் ஆதரவாளர்...

லண்டனில் நடைபெற்ற விரிவுரை ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

முதலீட்டாளர்கள், சுற்றுலாப் பயணிகள் ஆகியோரின் வருகையை தடுப்பதற்கும், இலங்கை பொருட்களுக்கான சர்வதேச சந்தை வாய்ப்பை தடுத்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ள புலி ஆதரவாளர்கள் முயற்சித்து வருகின்றனர்.

வன்முறைச் சம்பவங்களை கட்டவிழ்த்து விட்டு நாட்டில் மீண்டும் குழப்பத்தை ஏற்படுத்த புலிகளின் ஆதரவாளர்கள் முயற்சித்து வருகின்றனர்.

போர்க் காலத்தில் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படும் புகைப்படங்கள் போலியானவை. இவை வேண்டும் என்றே மேற்கொள்ளப்படும் சதி நடவடிக்கையாகும் என அமைச்சர் கூறினார். (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.